✶ விலை ரூபா 1-25

# ஈழநாடு

THE EELANADU

NATIONAL TAMIL DAILY

மலர் .6 ஆனி 18 ஷவ்வால் 2 இதழ் 138

யாழ்ப்பாணம் திங்கட்கிழமை 2-7-84

'யுனிசெவ்' திட்டத்தின்கீழ்

## யாழ். நகர அபிவிருத்தி வேலைகள் இம்மாத இறுதியில் ஆரம்பம்

(யாழ்ப்பாணம்)

'யூனிசெவ்' உத்தியோகத்தர்கள் இம்மாத இறுதியில்யாழ்ப்பாணம் வருகிறார்கள். அவர்கள் வந்ததும், யாழ். நகரில் 'யுனிசெவ்' திட்ட அபிவிருத்தி வேலைகள் ஆரம்பமாகும்''

யாழ். மாநகரசபை ஆணையாளர் திரு. சி. வி. கே. சிவஞானம், நேற்றுக்காலை சபைக் கமிட்டி அறையில் நடந்த ஆலோசனைக்கூட்டத்தில் மேற்கண்ட தகவலைத் தெரிவித்தார்.

ஆணையாளர் திரு. சிவஞானம் தலைமையில் நடந்த இக் கூட்டத்தில் யாழ். மாநகர சபை உத்தியோகத்தர்கள், சனசமூக நிலையப் பிரதிநிதிகள் கலந்து கொண்டார்கள்.

அரியாலை கிழக்கு, அரியாலை மேற்கு, நாவாந்துறை, குருநகர், பொம்மைவெளி, கொட்டடி, கொழும்புத்துறை ஆகிய பகுதிகளுக்கு 19 குழுக்கள் தெரிவு செய்யப்பட்டுள்ளன.

இக்குழுக்கள், அப்பகுதிகளை நேரில் பார்வையிட்டு, கிணறுகள், மலகூட பாரிய குழிகள், மற்றும் அபிவிருத்தி செய்ய வேண்டிய இடங்களைத் தெரிவிப்பார்கள்.

இம்மாதம் 15ம் திகதிநடை

(8 ம் பக்கம் பார்க்க)



# முதல் சுற்று பேச்சு சுமுகமாகநடந்தது



## பேச்சுக்களின் பெறுபேறு குறித்தே சர்வகட்சி மாநாடு

### இந்திராவுக்கு ஜே.ஆர். விருந்தளித்தார்

நமது வெளிநாட்டுச் செய்திச்சேவை

இலங்கைத் தமிழர் பிரச்னை குறித்து ஜனாதிபதி திரு. ஜே. ஆர். ஜெயவர்த்தனவும், இந்தியப் பிரதமர் திருமதி இந்திரா காந்தியும் நேற்றுக் காலை நடத்திய முதல் சுற்றுப் பேச்சுக்கள், மிகவும் சுமுகமான சூழ்நிலையில் நடைபெற்றது.

இருதலைவர்களும், முதலில் உதவியாளர்கள் எவரும் இல்லாமல் சுமார் ஒருமணி நேரம் பேச்சுக்கள்நடத்தினர். இதன்பின்னர், இருதலைவர்களுடன் இலங்கை தேசிய பந்தோபஸ்து அமைச்சர் திரு. லலித் அத்துலத் முதலியும், இந்திய வெளிவிவகார அமைச்சர் திரு. பி. வி. நரசிம்மராவும் கலந்துகொண்டு இலங்கைத் தமிழர்கள் பிரச்னைகுறித்து சுமார்எழுபத்து ஐந்து நிமிடநேரம் மனம்விட்டுப் பேசினார்கள்.

இந்திய வெளிவிவகார அமைச்சர் திரு. பி.வி. நரசிம்மராவ் கருத்து வெளியிடுகையில்; இலங்கைத் தமிழர் பிரச்னை தொடர்பாக இந்தியப்பிரதமர் திருமதி காந்திக்கும், இலங்கை ஜனாதிபதி திரு. ஜே. ஆர். ஜெயவர்த்தனவுக்குமிடையில் நடைபெறும் பேச்சு வார்த்தைகளின் முடிவுகளே கொழும்பு சர்வகட்சி மகாநாட்டின் எதிர்காலத்தை நிர்ணயிக்கும்'' என்று தெரிவித்தார்.

''இருதலைவர்களுக்கும் இடையில் நடைபெறும் பேச்சுவார்த்தைகள் மிகவும் முக்கியத்துவம் வாய்ந்தவை என்பதனால் இதன் விளைவுகளை அடிப்படையாகக்கொண்டே சர்வ கட்சி மாநாடும் அமையலாம்'' என்றும் அவர் குறிப்பிட்டார்.

இந்தியப் பிரதமர் திருமதி இந்திராகாந்தியும், இலங்கை ஜனாதிபதி திரு. ஜே. ஆர். ஜெயவர்த்தனவும் இலங்கைத் தமிழர் பிரச்னை குறித்து உயர் மட்டபேச்சுக்களை நேற்றுக் காலை சுமார் இரண்டேகால் மணிநேரம் நடத்தினர்

புதுடில்லி 'ராஷ்டிரபதி பவனில்' இப் பேச்சுக்கள் நடைபெற்றன

#### சுமுகமான முறையில்

பேச்சுக்கள் சுமுகமான முறையில் நடைபெற்றதாகவும், இலங்கைத் தமிழர் பிரச்னையின் பல்வேறு அம்சங்கள் குறித்தும் அவற்றைத் தீர்க் தாக கும் வழிவகைகள் பற்றியும் முக்கியமாக ஆராயப்பட்ட இந்திய வெளிநாட் டமைச்சின் அதிகாரி ஒருவர்

(8-ம் பக்கம் பார்க்க )

## பொது இடமாற்றம் இரண்டு வாரத்தில்

(கொழும்பு)

இடம்பெயர்ந்த ஆசிரியர்களில் மிகவும் பாதிக்கப்பட்டவர்கள் கல்விச்சேவை ஆணைக் குழுவினரை நேரில் சந்தித்து தமது பாதிப்புக்களை நிரூபித்தால் உடனடியாக இடமாற்றம் வழங்கப்படும் என்று குழு உறுப்பினர் கலாநிதி ஆ. கந்தையா தெரிவித்துள்ளார்

மிகவும் பாதிக்கப்பட்டதற்கான சான்றுகளுடன் கூடமைக்குத் திரும்பியதற்கான அத்தாட்சிக் கடிதத்துடன் வருபவர்களுக்கு தொடர்ந்து இடமாற்றம் வழங்கப்படுவதாகவும் அவர் தெரிவித்தார்.

கல்வி அமைச்சில் இயங்கி வரும் இக்குழுவில் திருவாளர்கள்; அபயகுணசேகரா, காரியவாசம், ஆ. கந்தையா ஆகியோர் இடம் பெற்றுள்ளனர்.

பொதுஇடமாற்றம்தொடர்பாக இரண்டு வாரத்தில் அறிவிக்கப்படும் என்றும் அவர் கூறுகிறார்.

## மருந்து 'பன்டேஜ்' ஆஸ்பத்திரியில் திருட்டு

(யாழ்ப்பாணம்)

அராலி அரசினர் ஆஸ்பத்திரியில் காயங்களுக்கு பாவிக்கப்படும் மருந்து வகைகளும், 'பன்டேஜ்' ஆகியனவும்நேற்று முன் தினமிரவு இனந்தெரியாதவர்களினால் கொள்ளையடிக்கப்பட்டுள்ளது. (சூ)

## வானொலி தமிழ்நிகழ்ச்சி: புதிய மாற்றங்கள்

(கொழும்பு)

இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத் தமிழ்ச்சேவையின் இவ்வருட ஜூலை ஆகஸ்ட் செப்டம்பர் மாதங்களுக்கான நிகழ்ச்சிகள் நல்ல முறையில் தயாரிக்கப்பட்டுள்ளன. இம் மாற்றங்கள் இன்றுமுதல் அமுலுக்கு வருகிறது.

''சங்கத்தமிழின்'' என்ற 15 நிமிடநேரப் புதிய தொடர் நிகழ்ச்சி ஞாயிறுதோறும்இரவு 9-30க்கு ஒலிபரப்பாகும்.

மற்றுமொரு புதியநிகழ்ச்சி, நீதிநூல்களிலிருந்து தெரிவு செய்யப்படும் பாடல்களைக் கொண்ட விளக்கங்களுடன்

(8ம் பக்கம் பார்க்க)

## "ஆயுதங்களை வாங்க நிதி உதவி வழங்கவில்லை"

### பிரதமர் தட்சருக்கு பிரி. இலங்கை தமிழர் சங்கம் அறிவிப்பு

[லண்டன்]

இலங்கைப் பயங்கரவாதிகளுக்கு ஆயுதங்களை வாங்குவதற்கு பணஉதவி வழங்கவில்லையென்று பிரிட்டனில் உள்ள இலங்கைத் தமிழர்கள் அங்கம் வகிக்கும் ஒருமைப்பாட்டு இயக்கம் தெரிவித்துள்ளது.

பிரிட்டிஷ் பிரதமர் திருமதி மாகிரெட் தட்சருக்கு இவர்கள் எழுதியுள்ள கடிதம் ஒன்றிலேயே இவ்வாறு தெரிவித்துள்

(8ம் பக்கம் பார்க்க)

## சதிப்புரட்சி முறியடிப்பு

லண்டன், ஜூலை. 1

பொலிவியாவில் நேற்று நடைபெற்ற இராணுவச்சதி முயற்சி முறியடிக்சப்பட்டுள்ளது!

இந்த முயற்சியை மேற்கொண்டவர்கள் ஜனாதிபதி சுவர்சோலைக் கடத்திக் கொண்டு சுமார் 10 மணித்தியாலங்கள் வரை வைத்திருந்தனர். பின்னர் ஜனாதிபதிக்கு சார்பான இராணுவப்படையினர் ஜனாதிபதி சுவாசோவை மீட்டதன் மூலம் இச்சதி முயற்சி முறியடிக்கப்பட்டது.

தென் அமெரிக்க நாடான பொலிவியாவில் நூற்றுக்கு மேற்பட்ட இராணுவச்சதிப் புரட்சிகள் இடம்பெற்றுள்ளது என்பது குறிப்பிடத்தக்கது. (சூ)

## மயானத்தில் புதைக்கப்பட்ட இரசாயனப் பொருட்கள்

### ஏறுவூரில் பொலிஸார் மீட்டனர்

[மட்டக்களப்பு]

ஏறுவூரிலுள்ள மயானம் ஒன்றில் கைக்குண்டு தயாரிக்க உதவும் இரசாயனப் பொருட்கள் புதைக்கப்பட்டிருந்ததைப் பொலிசார் கண்டுபிடித்துள்ளனர்.

தீவிரவாத இளைஞர் ஒருவர் அண்மையில் மட்டக்களப்பில் கைதுசெய்யப்பட்டதைதொடர்ந்து இந்த பொருட்கள் புதைக்கப்பட்டிருந்ததுதெரியவந்தது.

இந்த இரசாயனப் பொருட்கள் கடந்த ஆண்டு மட்டக்களப்புபாடசாலைஒன்றிலிருந்து கொள்ளை அடிக்கப்பட்டவை எனத் தெரியவந்துள்ளது. (சூ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வரி விளம்பரம்

## விற்பனைக்கு

பருத்தித்துறை வீதிக்கு அருகாமையில் கட்டைப்பிராய் ஒழுங்கையில் இரண்டு பரப்புக் காணி உடன்விற்பனைக்குண்டு. விபரங்களுக்கு: சே. மகாலிங்கம், காவேரி பருத்தித்துறை வீதி, கோப்பாய் தெற்கு. தொலைபேசி: 22490 (581)

North Town வெள்ளை, பிறவுண் பேட்டுக் குஞ்சுகள், குறஸ் புறெய்லேஸ் சேவல் குஞ்சுகள் யூலை மாதம் 1ம், 10ம் திகதிகளில் விநியோகிக்கப்படும். ராதா கிருஷ்ணாஸ், 392. நாவலர் வீதி, கயிலாசபிள்ளையார் கோவிலடி. 585

Hyline Hisex ஆகிய இன ஒரு நாட் கோழிக்குஞ்சுகள் 6-7-84, 16-7-84, 30-7-84 ஆகிய நாட்களில் எம்மிடம் விற்பனைக்கு உண்டு. விபரங்களுக்கு ''சீமாட்டி பாம்ஸ்'' மயிலங்காடு, சுன்னாகம், சீமாட்டி 122 மின்சார நிலைய வீதி யாழ்ப்பாணம். 620

உடுவில் ஆங்கில மகளிர் கல்லூரிக்கு அருகாமையில் உள்ள அம்பலவாணர் வீதியில் றோட் டோரமாக மூன்றே முக்கால் பரப்பும் மூன்று குழியும் காணி உடன் விற்பனைக்குண்டு. தொடர்பு; சி. தில்லை மகாராசன், வண்டியர் வளவு, உடுவில், சுன்னாகம். 621

நல்லூர் கோவிலுக்கு அருகில் 3½ பரப்புக்காணி விற்பனைக்குண்டு. நேரில் தொடர்பு கொள்ளவும். தரகர் தேவையில்லை. விளம்பரஇல: 610 C/o ஈழநாடு யாழ்ப்பாணம். 610

சுண்ணாகம் மின்சார நிலைய எல்லையில் கிணற்றுடன் கூடிய 13 பரப்புத் தோட்டக் காணி (விளான்) விற்பனைக்குண்டு. தொடர்பு- க, மனோகரநேரு (ஆசிரியர்) கிழுவானை. கோப்பாய். 624

நீர்வேலியில் நிந்தசிட்டி அல்லது மாலை என அழைக்கப்படும் தோட்டக்காணி நான்கு பரப்பு விற்பனைக்கு உண்டு. தொடர்பு க. மனோகரநேரு (ஆசிரியர்) கிளுவானை கோப்பாய். 623

கந்தர்மடம் பலாலி றோட் ஆலடிச்சந்தியிலுள்ள 308, 310 இலக்க கடைகள் விற்பனைக்குண்டு. விபரங்களுக்கு; 5A, மணல்தரை வீதி, யாழ்ப்பாணம். 577

Bairaha Farms வெள்ளை, பிறவுண் பேட்டுக்குஞ்சுகள் சேவற்குஞ்சுகள் யூலைமாதம் 16, 30 ந் திகதிகளில் விநியோகிக்கப்படும் பதிவு செய்க. சற்குணராசா அன் பிறதர்ஸ், பிரம்படி, கொக்குவில். 380

தேக்குத் தளபாடம் (Hall setty, chairs with Foam cushions, table and stools) மிகவும் நல்லநிலையில் விற்பனைக்கு உண்டு. 127, கச்சேரி நல்லூர் வீதி, யாழ்ப்பாணம். (570)

நல்லஉறுதியான 31.5 H.P. கொண்ட டீசல் பிளாக்ஸ்ரன் எஞ்சின், பெட்றோல் ஜீப் வண்டி, இரும்பால் செய்யப்பட்ட றெயிலர் பெட்டி பக்கம் இரு சில்லுகள் கொண்டது. தொடர்பு: நிர்வாக இயக்குநர், கரும்பு ஆலை, ஸ்கந்தபுரம். (603)

கந்தரோடை குளத்தடி, கந்தையா உவாத்தியார் வீதியில் 2 பரப்புக் காணியுடன் வீடு சகல வசதிகளுடன் உடன் விற்பனைக்குண்டு. தொடர்பு: ஆர். பேரம்பலம், கந்தரோடை குளத் தடி, சுன்னாகம். (606)

## விற்பனைக்கு

கொக்குவில்மேற்கு சொறனவடலியில் 2 1/2 பரப்புக்காணி கிணற்றுப் பங்கோடு உடன் விற்பனைக்குண்டு. தொடர்பு: முருகையா, 123, கஸ்தூரியார் றோட், நாராயணசாமி, 45, சபாபதி ஒழுங்கை, கொக்குவில். (617)

81 ஸ்ரீ தொடர் பிலக்க ஹொண்டா CB 125 மோட்டார் சைக்கிள் உடனடியாக விற்பனைக்குண்டு. விபரங்களுக்கு: 439, பூர்ணா டிஸ்பென்சறி, கண்டிவீதி, அரியாலை. (627)

புன்னாலைக்கட்டுவன் தெற்கு புத்தூர் வீதியில் தோட்ட செய்கைக் காணி 10 பரப்பு விற்பனைக்கு உண்டு. விபரத்திற்கு தொடர்புகொள்க: பா. பாலச்சந்திரன், புன்னாலைக் கட்டுவன் தெற்கு. (637)

கண்டாவளை அந்தோனிப் பிள்ளை ஆசிரியருடைய 3 ஏக்கர் சிறுபோகஉறுதிக்காணி விற்பனைக்குண்டு. சுவாமிநாதர் சட்டம்பி வளம்புரம், கொழும்புத்துறை. [637]

யாழ். நகரில் முன்னணியிலும் நல்ல நிலையிலும் உள்ள அச்சு இயந்திரங்களும் சகல உபகரணங்களும் உடன் விற்பனைக்குண்டு. தொடர்பு: விளம்பர இலக்கம் 641. (641)

நல்ல நிலையில் சொந்தப் பாவிப்பில் உள்ள 38 சிறி தொடர் இலக்க Toyata Hiace வான் விற்பனைக்கு உண்டு. தொடர்பு: செ. கிருபைராசா, 19, பெரியகடை, யாழ்ப்பாணம். B. சிவபாலன், நாகலிங்கம் வீதி, கொக்குவில் மேற்கு. (642)

## தேவை

கொன்வென்ட் பாலர் பாட சாலையில் கல்வி பயிலும் ஐந்து வயதுச் சிறுவனுக்கு, சனி, ஞாயிறு, விடுமுறை நாட்களில் காலை நேரத்தில் இரண்டுமணி நேரம் (9-00—11-00) புத்தூரில் உள்ள வீட்டிற்கு வந்து ஆரம்பக்கல்வி கற்பிக்கக் கூடிய பயிற்றப்பட்ட ஆசிரியை தேவை. 30 வயதிற்குட்பட்டவர்கள் விரும்பத் தக்கது. நல்ல சம்பளம் வழங்கப்படும். விண்ணப்பிக்க:- விளம்பர இல. 601, C/o, ஈழநாடு, யாழ்ப்பாணம், 601

லொறி கிளீனர் ஒருவர் தேவை. குடும்பப் பொறுப்புகள் இல்லாதவராக இருத்தல் வேண்டும். 4-7-84-ந் திகதி விண்ணப்பத்துடன் நேரில் வரவும். மனேஜர், பவர் அன் கம்பனி லிமிட், மணிக்கூட்டு வீதி, யாழ்ப்பாணம். 629

## கல்வி

வயரிங், மோட்டார்மெக்கானிசம் காலை வகுப்புக்கள் கிழமை நாட்களில் நடைபெறுகின்றன, புதிய மாணவர்கள் 3-7-84ல் சேர்க்கப்படுவார்கள். தொடர்பு கொள்க. பொறியியல் கல்வி நிலையம் (Engineering Education Centre): யாழ்ப்பாணக் கல்விநிலையக்கட்டிடம், சாந்தி சினிமா அருகாமை, 22 ராமையா செட்டியார் லேன், யாழ்ப்பாணம். விரிவுரையாளர்: S. C. இம்மானுவேல் B. Sc (Cey) Elecrtical and Automobile Engineer. 599

## வாடகைக்கு

தட்டாதெருச் சந்திக்கு அண்மையில் இருக்கும் இரண்டு கடைகளும் வாடகைக்குக் கொடுக்கப்படும் விபரம் நேரில் 'கோபால்ரேட்ஸ்' 760/1 காங்கேசன்துறை வீதி, யாழ்ப்பாணம். 607

PHOTO STAT
பிரதிகளுக்கு
கொழும்பு ஸ்ருடியோ
யாழ்ப்பாணம்

## பின் முற்றுகும் கட்டளை பற்றிய அறிவித்தல்

பருத்தித்துறை மாவட்ட நீதிமன்றில்

குடியியல் நடைமுறைச்சட்டக் கோவையின் 524ம் பிரிவின் கீழான விண்ணப்பம் தொண்டமானாறு கெருடாவிலைச் சேர்ந்த காலஞ் சென்ற உலகநாதர் செல்வத்துரையின் மரணசாதன விடயத்தில்,

மரணமெய்தியவர்

தம்பிமுத்து பெரியதம்பி கெருடாவில் தொண்டமானாறு.

மனுதார்

மரணசாதன நியாயாதிக்க } வழ இல: 1203

எதிராக

1. வேலுப்பிள்ளை கைம்பெண் சிவயோகம்மா கெருடாவில் தொண்டமானாறு
2. இராசதுரை மனோகரன்
3. இராசதுரை அரிச்சந்திரன்
4. இராசதுரை சற்குணம்
5. இராசதுரை சூரியகுமார்
6. இராசதுரை இராஜேஸ்வரன்
7. இராசதுரை குமாரசாமி
8. குமாரசாமி பெண் தேவமனோகரி
9. குமாரதேவர் விசாகன்
10. குமாரதேவன் விசாகன் பெண் லலிதா, எல்லோரும் யாழ்ப்பாணம் வீதி, உடுப்பிட்டி

எதிர்வாதிகள்

மேலேயுள்ள இலக்கம் கொண்ட மரணசாதன வழக்கு மேலே பெயர் குறிப்பிடப்பட்ட இறந்துபோனவரின் மரணச்சொத்தை நிருவகிப்பதற்காக மேற்படி நீதிமன்றில் தொடரப்பட்டு அதில் அதற்கிணங்க பின்முற்றுகும் கட்டளை பதியப்பட்டுள்ளதென இத்தால் அறிவிக்கப்படுகின்றது.

அக்கறையுள்ள எவரேனும் இம்மன்றில் 1984ம் ஆண்டு ஆடி மாதம் 27ம் திகதியன்று முற்பகல்9-00மணிக்கு தோற்றி அவ்வாறு பதியப்பட்ட பின் முற்றுகும் கட்டளை ஏன் முற்றாக்கப்படக்கூடாது என்பதற்கு காரணம் ஏதும் இருப்பின் காட்டுமாறு இத்தால் தேவைப் படுத்தப்படுகின்றீர்.

1984ம் ஆண்டு ஆனி மாதம் 26ம் திகதி

நீதிமன்றக் கட்டளைப்படி
றிச்சேட் ஜெயராசசிங்கம்
பதிவாளர்

வரைவு
மு.க.முத்துக்குமார்
மனுதாரின் சட்டத்தரணி
625

## வியாபாரம் பெருக விளம்பரம் செய்க

## மனேஜர் தேவை
(RESIDENTIAL MANAGER)

பளையில், ஐம்பது ஏக்கர் காணியில் அமைந்துள்ள தென்னை - கால்நடை வளர்ப்புத் தோட்டத்தில் கடமையாற்றுவதற்கு விவசாயத்துறையில் பயிற்சி பெற்ற திறமை மிக்க மனேஜர் தேவை. அனுபவம், தகைமை அடிப்படையில் சம்பளம் நிர்ணயிக்கப்படும். தெரிவு செய்யப்படுபவர் தோட்டத்தில் தங்கக்கூடியவராக இருக்கவேண்டும். இம்மாதம் பத்தாம் திகதிக்கு முன்னர் விண்ணப்பிக்கவும்.

விளம்பர இல: 630,
மே/பா ஈழநாடு. 630

## சீமெந்து — கண்டாவளை மண்

தொகையாகவும், சில்லறையாகவும்
சீமெந்தும், கண்டாவளை மண்ணும்
நேரடியாக விநியோகம் செய்யப்படும்.

தொடர்பு கொள்ளவும்:

துரை

ஆர். ஜி. பில்டிங்ஸ்,
66, ஸ்ரான்லி றோட்,
தொலைபேசி: 23750
83/1, பருத்தித்துறை வீதி,
(631) தொலைபேசி: 23565 ஆனைப்பந்தி.

## கால்நடை ஏலவிற்பனை

02-6-84 ஈழநாடு கால்நடை விற்பனை அறிவித்தலைத் தொடர்ந்து, திருநெல்வேலி கிருஷிகப் பாடசாலையில் 11-7-84-ந் திகதி புதன்கிழமை பிற்பகல் 2-00 மணியளவில் கீழ் காணப்படும் விலங்குகள் பகிரங்க ஏல விற்பனையில் விற்கப்படும் என்பதை அறியத் தருகின்றேன்.

| இனம் | தொகை |
|---|---|
| ஜேசி, சிந்தி கலப்பினம் — | பசுக்கள்-9 |
| பிறீசியன், சிந்தி ஜேசி கலப்பினம்— | கன்னிப்பசுக்கள்-2 |
| ஜேசி, சிந்தி கலப்பினம் — | பசுக்கன்றுகள்-7 |
| ஜேசி, சிந்தி தர்ப்பக்கார் கலப்பினம்— | நாம்பன்கன்றுகள்-11 |

பண்ணை முகாமையாளர்,
613 திருநெல்வேலி.

## யாழ் மக்களுக்கு ஓர் அரிய சந்தர்ப்பம்

டென்மார்க், ஜேர்மனி, பெல்ஜியம், இத்தாலி, பிரான்ஸ்

மற்றும் உலக நாடுகளிற்கு செல்வதற்கான பிரயாணச் சீட்டுகளும், மற்றும் சகல ஒழுங்குகளும் செய்து கொடுக்கப்படும்.

விபரங்கட்கு எம்முடன் நேரில் தொடர்பு கொள்ளவும்,

# STANLEY CENTRE

(றெயில்வே கடவை அருகாமை)
ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.
(640)

## தொண்டைமானாறு செல்வச்சந்நிதி தேர்த் திருப்பணிச்சபை

செல்வச்சந்நிதி வேலவனுக்கு
25 லட்ச ரூபா செலவில்
சிறப்பாக அமைக்கப்பட்டு வரும் சித்திரப் பெருந்தேரின்
வெள்ளோட்ட வைபவம்
வரும் ஆவணி மாதம் 21-ம் நாள்
(1984-09-06) வியாழன்
காலை 9-00 மணியளவில் வரும் சுபவேளையில் நடைபெற எல்லாம்வல்ல முருகப்பெருமான் திருவருள் பாலித்துள்ளார் என்பதை மகிழ்ச்சியுடன் அறியத்தருகின்றோம்.
திருப்பணி வேலைகளை பூர்த்தி செய்ய நிதி தேவைப்படுவதால்பக்தர்கள் தங்கள் பங்கைச் செலுத்தி செல்வச்சந்நிதி வேலவனின் தேர்த்திருப்பணியில் பங்கு கொள்ளுமாறு தயவுடன் கேட்டுக்கொள்கின்றோம்.
காசோலைகள் அனுப்ப விரும்புவோர்
''தொண்டைமானாறு செல்வச்சந்நிதி தேர்த் திருப்பணிச்சபை''
பெயரில் எழுதி அனுப்பவும்.
நடைமுறை க/கு இல: C 5001
இலங்கைவங்கி, பருத்தித்துறை.
செயலாளர்,
தேர்த் திருப்பணிச் சபை. (626)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விண்வெளி ஆயுதக்குறைப்பு மாநாடு:

# அமெரிக்கா முன்நிபந்தனைகளை வைக்கிறது!

## சோவியத்யூனியன் கண்டனம்!

மாஸ்க்கோ, ஜூலை 1 விண்வெளியில் இராணுவ நடவடிக்கைகளைக் குறைப்பது குறித்து சோவியத் அமெரிக்காவுக்கிடையே இடம்பெறவுள்ள உச்சி மகாநாட்டுக்கு அமெரிக்கா முன்நிபந்தனைகள் சிலவற்றை முன்வைப்பதாக சோவியத்தின் உத்தியோக பூர்வ பத்திரிகையான 'டாஸ்' குற்றஞ் சாட்டியுள்ளது.

இந்த உச்சி மகாநாடு எதிர்வரும் செப்டெம்பர் மாதம் ஆஸ்திரியாவில் வியன்னு நகரில் இடம்பெறவுள்ளது.

'டாஸ்' தெரிவித்திருப்பதாவது 'விண்வெளியில்இராணுவ நடவடிக்கைகளைக் குறைப்பது பற்றிய மகாநாட்டில் சோவியத் கலந்து கொள்ள முன்வந்துள்ள போதிலும் அமெரிக்கா சிலமுன்நிபந்தனைகளை முன் வைக்கிறது. இதனுல் சோவியத்தின் கருத்துக்கள் இம்மகாநாட்டில் வலுப்பெருமல் போய்விடக் கூடும்.

இத்துடன் இம்மகாநாடு குறித்த வெள்ளை மாளிகை அபிப்பிராயங்களும் சோவியத்துக்குப் பாதகமானவையாகவேயுள்ளன. விண்வெளியில் ஆயுதக்குறைப்புக்குறித்து இம்மகாநாட்டில் ஆராயப்பட விருப்பதாக அறிவிக்கப்பட்டுள்ளது. ஆயினும் அமெரிக்கா சோவியத்துடன் ஏற்கனவே நடத்தி முறிவடைந்த ஐரோப்பாவில் அணுசக்தி ஏவுகணைகளைப் பொருத்துவது பற்றிய பேச்சுக்களையும் இம் மகாநாட்டில் புகுத்தி மீண்டும் அதனை ஆரம்பிக்க உத்தேசித்துள்ளது''

'டாஸ்' வேறு கருத்துக்கள் எதனையும் இம்மகாநாடு குறித்து வெளியிடவில்லை.

இதேவேளை அமெரிக்கத் தரப்பில் தெரிவிக்கப்பட்டுள்ள கருத்தில், உச்சி மகாநாட்டில் சோவியத் நிச்சயம் பங்கு பற்ற வேண்டுமென்பது வலியுறுத்தப்பட்டுள்ளது. முன் நிபந்தனைகள் எதுவும் அமெரிக்கா தரப்பில் வைக்கப்பட மாட்டாதெனவும், சோவியத்தும் அதுபோன்று வைக்கக் கூடாதெனவும் தெரிவிக்கப் பட்டுள்ளது. [கி]

## தஞ்சைப் பெரியகோவில்

### பராமரிப்பில் அமைச்சர் அக்கறை!

சென்னை, ஜூலை1 தஞ்சவூர் பிரகதீஸ்வரர் (பெரிய கோயில்) ஆலய நித்திய பூசைகளை ஒழுங்காக நடத்துவதில் தமிழக நிதி அமைச்சர் இரா நெடுஞ்செழியன் ஆர்வம் கொண்டுள்ளார்.

இராஜ இராஜ சோழனல் நிர்மாணிக்கப்பட்ட கட்டிடச் சிறப்பும், கலைச்சிறப்பும் வாய்ந்த் இவ்வாலயம், கடந்த பல வருடங்களாக பாராமரிக்கப் படாதிருந்து வருகின்றது.

இதன் வருவாய்க்கென பல நிலங்களும், உடமைகளும இருந்த போதிலும் அவை துஷ்பிரயோகம் செய்யப்பட்டுள்ளன. இதனுல் இவ்ஆலய நித்திய பூஜைகள் கூட ஒழுங்காக நடைபெறுவதில்லை. நித்திய பூஜைகளுக்கு வேண்டிய பால், நெய், எண்ணெய் போன்ற நைவேத்தியங்களைக் கூட இக்கோயில் பெறமுடியாத நிலையில் உள்ளதென இரா நெடுஞ்செழியன் சுட்டிக் காட்டியுள்ளார்.

அமைச்சர் நெடுஞ்செழியன் இவ்வாலய நிர்வாகஅமைப்பை ஒழுங்குசெய்து, ஒரு தொகைப் பணத்தினை இதன் நிர்வாக, வழிபாட்டு- அலுவல்களுக்கென ஒதுக்கவிருப்பதாகத் தெரிவித்துள்ளார்.

பிரகதீஸ்வரர் ஆலயம் கட்டிடக் கலைச்சிறப்புக்காரணமாக உல்லாசப் பயண முக்கியம் பெற்ற தொன்ருகவும் விளங்குகின்றது.

இதேவேளை இந்தியாவில் இதுபோன்ற பல வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த ஆலயங்கள் போதிய பராமரிப்பின்மையால் பாழடைந்துவருகின்றன என்பதும் குறிப்பிடத்தக்கது.

அமைச்சர் நெடுஞ்செழியன், இராஜ இராஜ சோழனின் ஆயிரமாவது முடிசூட்டுவிழா தினத்தை தஞ்சாவூரில் பிரமாண்டமான முறையில் கொண்டாடவும் முன்வந்துள்ளார். அவ்விழாவிற்கு இந்தியப் பிரதமர் திருமதி இந்திரா காந்தியும் அழைக்கப்படுவார் என்று கூறப்படுகிறது. (கி)

## நான்காவதுசுற்றில் ரமேஷ்கிருஷ்ணன் தோல்வி!

விம்பிள்டன், ஜூலை1 விம்பிள்டன் டெனிஸ் பந்தயச் சுற்றுப்போட்டிகளில் இந்திய வீரர் ரமேஷ்கிருஷ்ணன் நான்காவது சுற்றில் நேற்றுத் தோல்விகண்டார்.

வீரர் ரமேஷ் கிருஷ்ணன் முதல் மூன்று சுற்றுக்களிலும் உலகின் பிரபல ஆட்டக்காரர்களை தோற்கடித்து முன்னணியில் வந்துகொண்டிருந்தார். நேற்றைய நான்காவது சுற்றில் அவர் தென்னுபிரிக்க வீரரான கெவினிடம் 6-2, 3-6, 7-6, 7-6 என்ற செற்கணக்கில் தோல்வியடைந்தார்.

மூன்ருவது சுற்றில் ரமேஷ் கிருஷ்ணன் பெற்ற வெற்றி குறிப்பிடத்தக்கதாகும். இச் சுற்றில் இவர் தோற்கடித்த வீரர் நியூஸிலாந்தைச் சேர்ந்தவர். இவ்வீரரே கடந்த ஆண்டு விம்பிள்டன் இறுதிச் சுற்றுப்போட்டியில் சாம்பியனுன மக்கென் ரோவை பலமாக எதிர்த்தாடியவர் என்பது குறிப்பிடத்தக்கது.

இவரை வென்றதையடுத்து ரமேஷ் கிருஷ்ணன் இறுதி ஆட்டம்வரை இலகுவாகச் செல்வார் எனப் பலராலும் எதிர் பார்க்கப்பட்டது (கி)

## பொலிவியாவில் சதிப்புரட்சி

லிஸ்பன் ஜூலை 1 தென் அமெரிக்க நாடான பொலிவியாவில் திடீர் இராணுவப் புரட்சிச் சதி மூலம் அரசாங்கம் கவிழ்க்கப்பட்டுள்ளது.

தற்போது லிஸ்பனின் நடைபெறும் லத்தின் அமெரிக்க நாடுகளின் மாநாட்டில் போத்துக்கல் பிரதமர் இந்தச் செய்தியை தெரிவித்துள்ளார்.

ஸ்பாணிய ஜனுதிபதி மூலம் போத்துக்கல் பிரதமருக்கு இந்த சதி பற்றி தகவல் கிடைத்துள்ளதாக தெரிகிறது.

ஜனுதிபதி சுவாசோ இராணுவப் புரட்சியை நடத்தியவர்களினுல் கைது செய்யப்பட்டுள்ளதாகவும் அறிவிக்கப் பட்டுள்ளது. (சூ)

## இந்தியாவுக்கு இலங்கைக் 'கண்கள்'

புதுடில்லி ஜூலை 1 இலங்கைக் கண்தானச்சங்கம் நேற்று நான்கு சோடிக் கண்களை அகில இந்திய மருத்துவ விஞ்ஞான சங்கத்துக்கு நன்கொடையாக வழங்கியது. இந்நன்கொடை இலங்கை, ஜனுதிபதி திரு. ஜே. ஆர். ஜயவர்த்தனுவின் இந்திய விஜயத்தைக் குறிக்குமுகமாக வழங்கப்பட்டுள்ளது.

இலங்கை இத்துடன் இதுவரை இந்தியாவுக்கு மொத்தம் 349 கண்களை வழங்கியுள்ள தென்பது குறிப்பிடத் தக்கது

ஆசியாவிலேயே கண்தானங்களை வழங்குவதில் மிகமுக்கிய நாடாகஇருக்கும் இலங்கை, இந்தியா உட்பட பாகிஸ்தான் பங்களாதேஷ், நேபாளம் ஆகிய நாடுகளுக்கும் கண்களை வழங்கியுள்ளது என்பதும் குறிப்பிடத்தக்கதாகும்.

இந்தியப்பிரதமர் திருமதி இந்திராகாந்தி, இலங்கை ஜனுதிபதி ஆகியோரும் தமது கண்களை தானஞ்செய்ய விருப்பந் தெரிவித்துள்ளனர் என்றும் கூறப்பட்டது. [கி)

## ஜோன் டேனர் கனடாவில் பிரதமராஞர்!

ஒட்டாவா, ஜூலை 1 கனடாவின் புதிய பிரதம மந்திரியாக திரு. ஜோன்டேனர் நேற்றுப்பதவி ஏற்றுக் கொண்டார்.

ஒட்டாவாவில் நேற்று கனடா மகாதேசாதிபதி முன்னிலையில் முன்னுள் பிரதமர் திரு. பியரேட்ரூடோ தமது பதவியை சம்பிரதாய பூர்வ்மாகத் துறந்ததைத் தொடர்ந்தே திரு. டேனர் தமது பதவியை ஏற்றுக் கொண்டார்.

புதிய பிரதமர் திரு. டேனர் கனடாவில் பாதிப்பிற்குள்ளாகியுள்ள பொருளாதார நிலையைச் சீரமைப்பதே தமது பிரதான நோக்கம் என்று தெரிவித்தார்.

முன்பு அறிவித்தது போல் அவர் கனடாவின் அமைச்சரவை எண்ணிக்கையை 37 லிருந்து 29 ஆகக்குறைக்கவும் முடிவு செய்துள்ளார் என்று கூறப்பட்டது. (கி)

### மாணிக்கவாசகர் குருபூசை

[யாழ்ப்பாணம்]

அகில இலங்கைத் திருமுறை மன்றத்தினர் வரும்செவ்வாய்க் கிழமை பிற்பகல் திருநெல்வேலி கிழக்கு ஸ்ரீ வாலை அம்மன் ஆலயத்தில் மாணிக்க வாசகர் குருபூசையை கொண்டாடவுள்ளது. திருவாசகம் ஓதல், சொற்பொழிவு ஆகிய நிகழ்ச்சிகளும் இடம்பெறும்.

## புனித ஜோன் பொஸ்கோ தமிழ்த்தின விழா

(யாழ்ப்பாணம்)

''தமிழ்க்கலை, கலாசார பண்பாட்டுக்கமைய தமிழ்த்தின விழா யாழ். புனித ஜோன் பொஸ்கோ வித்தியாலயத்தில் சிறப்பாகக் கொண்டாடப்பட்டது.

புனித ஜோன் பொஸ்கோ வித்தியாலய அதிபர் அருட் செல்வி ஸ்ரனிஸ்லஸ்மேரி தலைமையில் இத்தமிழ்த்தினவிழா நடைபெற்றது.

சிறப்புவிருந்தினராக கார்மேல் மடத்துத்தாயார் சங்கைக்குரிய சகோதரி மேபிளும் மற்றும் யாழ். பல்கலைக் கழக விரிவுரையாளர் மௌனகுரு, தமிழ் கலை கலாசார பண்பாட்டுத்துறையைச்சேர்ந்த திருமதி புவனேஸ்வரி அருணுசலம் ஆகியோரும் கலந்துகொண்டனர்.

வித்தியாலய சின்னஞ்சிறு மாணவ, மாணவிகள்கூட தமிழ்கலாசார முறைப்படி அன்றையதினம் உடைஅணிந்திருந்தனர். இது பார்வையாளர் மனதை புளகாங்கிதமடையச்செய்தது குறிப்பிடத்தக்கது.

ஆயிரத்துக்கு மேற்பட்ட மாணவ-மாணவிகள் இவ்விழாவில் பங்கு பற்றியிருந்தனர்,

மாணவர்கள் பாடல், ஆடல் பேச்சுப்போட்டிகள் இடம் பெற்றன.

விரிவுரையாளர் மௌனகுரு சிறுவர்களுக்கு ஏற்ருற்போல் தமிழ் இயல், இசை, நாடகம் பற்றி எளிமையான நடையில் விளங்கக்கூடியதாக அழகாகப் பேசினுர்.

இளமையிலேயே சிறுவர்கள் ஒருவர் மேல் ஒருவர் அன்பாகவும்-பண்பாகவும் நடந்து கொள்ளவேண்டும் என்றும், ஒற்றுமையாக இருப்பதுடன், பிறருக்கு உதவிசெய்யப்பழகிக் கொள்ளவேண்டும் என்றும், பேராசை கொள்ளக் கூடாதென்றும் சிறுசிறு உதாரணக் கதைகள் சொல்லி விளங்க வைத்தார் விரிவுரையாளர் மௌனகுரு.

திருமதி அருணுசலம் தமது உரையின்போது பாரதியாரின் பாடல்களை இசையுடன் இனிமையாகப்பாடி மாணவர்களை மகிழ்வித்தார்.

வித்தியாலய அதிபர் அருட் செல்வி மேரி, தமிழ்த்தின விழாப் போட்டிகளில் வெற்றியீட்டிய மாணவர்களுக்குப் பரிசில்கள் வழங்கினுர். (மா)

ஹோம் பினன்ஸ் லிமிட்.
பூகொடை ஆலைத்துணிகள்
யாழ். புடவை வியாபாரிகட்கு
ஓர் அரிய சந்தர்ப்பம்
எம்மிடம் பணம் நிலையாக
வைப்புச் செய்த வியாபாரிகட்கு அவர்கட்குரிய
30% வருடவட்டி வழங்குவதுடன்
புடவை வகைகளும் கடன் வசதியுடன்
வியாபாரத்திற்கு வழங்கப்படும் என்பதை
மகிழ்ச்சியுடன் அறியத்தருகிரேம்
NATIONAL DELUXE
மின் விசிறிகள்
கடன் வசதியுடன் உண்டு
விபரங்கட்கு எம்முடன் தொடர்பு கொள்ளவும்.
ஹோம் பினன்ஸ் லிமிட்டெட்
82, கன்னதிட்டி வீதி, யாழ்ப்பாணம்.
போன்: 24310

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**மணிவாக்கு**

கடவுளோடு கடலிலும் செல்லலாம். அவர் இல்லாமல் வாயிற்படியையும் தாண்டவேண்டாம்.

— ரஷ்ய பழமொழி

## நமது நோக்கு

# சரி! குதிரைகள் பாடு எப்படி?

முன்னைநாள் இந்திய ஜனாதிபதியும் தத்துவ மேதையுமான டாக்டர் ராதா கிருஷ்ணன் ஒருமுறை லண்டன் சென்றிருந்தார். அப்போது அவரிடம் ஆங்கிலேய நண்பர் ஒருவர் பெருமை பேசிக் கொண்டார் - ''உங்களுடைய நாட்டில் எல்லாநிறத்திலும் ஆட்கள் உண்டு. சிலர் கறுப்பு, சிலர் மாநிறம், சிலர் வெழுப்பு. எங்கள் நாட்டில் எல்லோரும் ஒரே வெண்ணிறம்.''

டாக்டர் ராதா கிருஷ்ணன் பளீரென்று பதிலடி கொடுத்தார்— ''ஆம், நீங்கள் சொல்வது சரிதான், உலகத்தில் குதிரைகள்தாம் பல நிறம்; கழுதை எங்கும் ஒரே நிறம்தான்.''

வாய்ப்பேச்சிலும் பதிலடி கொடுப்பதிலும் இந்தியர்கள், குறிப்பாகத் திராவிடர்கள் திறமைசாலிகள். ஆங்கிலேயர் இவற்றில் பின்தங்கியவர்கள் என்பதுகருத்தல்ல; கழுதைகள் என்று கேலிபண்ணினாலும் ஏற்றுக்கொண்ட கடமையை பாரம் பாராது பொறுமையுடன் சுமப்பவர்கள் அவர்கள்.

ஒற்றைக் கண் நெல்சன் (Lord Nelson) இட்ட கட்டளையை இன்றும் சிரமேற்கொண்டு நடப்பவர்கள் ஆங்கிலேயர்கள். ''இங்கிலாந்து தனது ஒவ்வொரு மகனும் கடமையில் கண்ணுங்கருத்துமாயிருப்பான் என்று எதிர்பார்க்கிறது'' என்பது நெல்சன் விடுத்த கட்டளை.

இந்தியக் 'குதிரைகள்' ஒற்றுமைப்படாதபட்சத்தில் பாரதம் இரண்டாகப் பிரிய நேரிட்டது. உலகின் மிகப் புகழ்பெற்ற இந்தியத் தலைவர்கள் இதனைத் தடுக்க முடியவில்லை. பிரிவது உசிதமெனநினைத்தவரும் உண்டு.

இரண்டாகப் பிரிந்தது நல்லதே என்று நினைக்குமளவிற்கு இந்திய உபகண்டத்தின் இன்றைய அரசியல் நிலை சீரழிந்திருக்கிறது.

இரு நாடுகளும் மூன்று யுத்தங்களை நடத்திமுடித்து இன்று அடுத்த யுத்தம் எப்போதென்ற அளவிற்கு முரண்டிக்கொள்கின்றன.

இந்தியாவிலேயே வாழும் முஸ்லிம்களும் இந்துக்களும் சமாதானமாக வாழ்கின்றனரா? கோடிக்கணக்கில் வாழும் முஸ்லிம்கள் ஒரே தேசத்தில் வாழ்ந்தால் நிலைமை எவ்வாறு இருக்கும் என்பது சாதாரண மனிதனின் கேள்வி. இந்துசமயத்தில் தீவிரவாதம் மறுதலித்திருக்கிறது.

இதற்கு விடை இலகுவானதல்ல. பாரதம் ஒரு தேசமாகவிருந்தால் குறையும் நிறைவும் ஒரு தேசத்தைப் பொறுத்ததே! இந்திய உபகண்டத்தின் முன்னேற்றம், இந்து, முஸ்லிம் என்று வேறுபட்ட அடிப்படையில் கணிக்க இடமிராது. குதிரைகள் குழப்பம் செய்தாலும், குதிரைகள் குதிரைகளே! சங்கு சுட்டாலும்...என்று வாதிப்பவருமுளர்.

இதனை நாம் ஏற்றுக் கொள்ளக் கூடிய வகையில் இன்றைய இந்திய விவகாரங்கள் இருக்கவில்லை. பாகிஸ்தான் தலையிடி நீங்கிய போதும் ''காளிஸ்தான்'' எத்துணை துயரை ஏற்படுத்திவிட்டது. இந்துக்கள் - சீக்கியர், இந்துக்கள் - முஸ்லிம்கள், முஸ்லிம்கள்-சீக்கியர் என்றெல்லாம் தீவிர இயக்கங்கள் மலிந்துவருகின்றன. எல்லோரும் இந்தியர், அடிப்படைப்பண்பாடு ஒருமைப்பாட்டிற்குரியது. ஆனால் நடப்பதென்ன? இந்திராவின் ஆளுமையே பாரதத்தைக் காப்பாற்றி வருகிறதெனலாம்.

சுதந்திர காலத்திலேயே தனி நாடாகப் பிரிந்த பாகிஸ்தான் எவ்வாறு முன்னேறுகிறது? ஏழுவருடங்களாக சர்வாதிகார ஆட்சியை நடத்திவரும் ராணுவ ஜனாதிபதி ஸியா - அல் ஹக் இந்தியா தமது நாட்டை ஆக்கிரமிக்க வழி தேடுகிறதென்று கூச்சலிடுகிறார்.

முன்னைநாள் ஜனாதிபதி அலி புட்டோவை எவ்வித தயக்கமுமின்றித் தூக்கிலிட்டவர் நாட்டை ஜனநாயக வாழ்க்கை முறையில் இட்டுச் செல்ல, பாராளுமன்றத் தேர்தல் நடத்துவதாக வருடக் கணக்கில் வாக்குறுதி அளித்துவருகிறார்; இதுவெறும் புருடாவென்று மக்கள் கொந்தழிக்கின்றனர்.

சட்டமும் ஒழுங்கும் காற்றில் பறக்கும் பாகிஸ்தானில் எல்லாத்துறைகளிலும் அடக்குமுறைகள். அரசியல் கட்சிகளுக்கு, பத்திரிகைகளுக்குத்தடை. காவற்படைக்கொலை, ஆட்கடத்தல், சிறைச்சாலை உடைப்புப் போன்ற தீவிர எதிர்ப்புக்கள் நிரம்பிவழிகின்றன. மாணவரின் தீவிர இயக்கங்கள் இவற்றில் முன்னணி வகிக்கின்றன. பாகிஸ்தான் முன்னைநாள் நிதிஅமைச்சர் ஒருவர் பாகிஸ்தானில் ஒரு பிரம்மாண்டமான தேசிய நெருக்கடி உருவாகிறதென்று கருதுகிறார்.

வரலாறு கற்பிக்கும் பாடங்களை படிக்க முடியாத இத்துர்ப்பாக்கியநாடு 1969 குழப்பத்தில் ஜனாதிபதி அயூப் ஆட்சிகவிண்டதும் கிழக்குப்பாகிஸ்தான் பிரிந்ததையும் மறந்து விட்டது போலும்.

உலக வரலாற்றைப் பொறுத்தளவில் ஆசியாவில் இருபெரும் தேசங்களென மதிப்புப்பெறக் கூடிய இந்தியாவும் பாகிஸ்தானும் பிரிந்தது அந்நிய ஆட்சியின் சூழ்ச்சியால். இன்றும் ஒருவரை ஒருவர் பகைப்பதற்கும் பலம் குன்றியிருப்பதற்கும் மேனாடுகளின் ஊடுருவலும் ஒருமுக்கிய காரணமென்றால், குதிரையோட்டம் இருந்தவாறென்னே!

# "உலகில் ஒவ்வொரு இராணுவமும் குற்றச்சாட்டுக் குள்ளாகியுள்ளது!"

## 'ஏஷியா வீக்' சஞ்சிகைக்கு லலித் பேட்டி

புதுடில்லி, ஜூலை 1

''உலகில் கடமையில் ஈடுபட்டிருக்கும் ஒவ்வொரு இராணுவமும், குற்றச்சாட்டுகளுக் குள்ளாகியுள்ளது. எமது இராணுவத்தினர் மீதான குற்றச்சாட்டு நிருபிக்கப்படுமானால் நாம் உரிய நடவடிக்கை எடுப்போம்'' என்று இலங்கை தேசிய பாதுகாப்பமைச்சர் திரு லலித் அத்துலத் முதலி தெரிவித்தார்.

''தமிழ் மக்கள் யாழ்ப்பாணத்தில் இராணுவ வன்முறைகள் நடைபெறுகின்றன என்று கூறிவருகிறார்கள். இது சரிதானா? என்று ''ஏசியா வீக்'' சஞ்சிகைநிருபர் கேட்டகேள்வியொன்றுக்கே திரு அத்துலத் முதலி மேற்கண்டவாறு பதிலளித்தார்.

இக்கேள்விக்கு அமைச்சர் அத்துலத் முதலி மேலும் விளக்கமளித்ததாவது; ''தவறிழைத்த சில இராணுவ ஊழியர்களை நாம் தண்டித்துள்ளோம். ஆனால் இந்த நடவடிக்கைக்காக நரம் பாராட்டப்படவில்லை.

இராணுவத்தினரை அவர்களது கடமையைச் சரிவரச் செய்ய உதவுகிறோம். வழக்கறிஞர்களை அவர்களிடம் சென்று சட்டம், அவர்களது கடமைகள் பற்றி உணர்த்தச் செய்துள்ளேன்.''

''இந்தியாவிடமிருந்துஇலங்கைக் குழுக்கள் உதவி பெறுவதாகக் கூறப்படுவது பற்றிய உங்களது கருத்துயாது?''

''இலங்கைப்பயங்கரவாதிகள் இந்தியாவில் இருக்கிறார்கள் என்பது உண்மை. அநேகமாக அவர்கள் எல்லோரும் தமிழ்நாடு மாநிலத்திலேயே உள்ளார்கள். இந்தியாவில் பயங்கரவாதப்பயிற்சி முகாம்கள் இருக்கின்றன என்பதை நம்புகிறேன். எனக்குகிடைத்த தகவல்கள் ஒருபுறமிருக்க நாம் கைது செய்தவர்களில் பலர் தாம் இந்தியாவில் பயிற்றப் பட்டதாகத் தெரிவித்துள்ளனர்.

பயங்கரவாதக்குழுக்கள் தமிழகத்தில் எதுவும் செய்யாமலிருக்கவில்லை. அவர்கள் தம்நோக்கங்களை நிறைவேற்ற ஏதாவது செய்து கொண்டேயிருக்க வேண்டும்'' என்று அமைச்சர் லலித் கூறினார்.

''சர்வகட்சி மகாநாடு எவ்வளவு தூரம் வெற்றி பெற்றுள்ளது?

அமைசசர் கூறுவது:'' சர்வகட்சி மகாநாடு முறிந்து விடவில்லை. என்பது உண்மை. பல முரண்பாடுகளுக்கு மத்தியிலும் அது நடைபெறுவது ஒரு வித வெற்றியே. நீண்ட சமரசத்துக்கு இது தவிரவேறு வழி எதுவுமில்லை. இராணுவ ரீதியான தீர்வு என்பதில் எனக்கு நம்பிக்கையில்லை.''

(கி)

# வடமராட்சி மக்களின் பிரயாணக் கஷ்டங்கள்

பருத்தித்துறை பஸ்டிப்போ மூடப்பட்டு இன்றுடன் ஐம்பது நாட்கள் ஆகிவிட்டன!

பாதுகாப்புக் காரணங்களுக்காக பருத்தித்துறை, காரைநகர் டிப்போக்களை கோண்டாவில் டிப்போவுடன் அரசாங்கம் இணைத்தது ஆனால் இந்த இணைப்பு நடவடிக்கையின் பிரதிபலன்களைப் பெரிதும் உணர்கின்ற, அனுபவிக்கின்ற அவஸ்தைப்படுகின்ற அப்பாவிப் பிரயாணிகளின் கஷ்டங்களும் சிரமங்களும் அனர்ந்தம்! பருத்தித்துறை பஸ் டிப்போ முன்னர் இயங்கும் போதே அதன் பஸ் சேவைகளில் காத்துநின்று தொங்கித் தொத்தி சலிப்பான பயணங்களை மேற்கொண்டு வந்த இப்பிரயாணிகளை இந்த மூடல் இணைப்பு நடவடிக்கை மேலும் துன்புறுத்துகிறது! அரசாங்கத்தால் பஸ் சேவைகள் சுவீகரிக்கப்படு முன்னர் வடமராட்சிப்பகுதியில்இயங்கி வந்த தனியார் பஸ்களின் சேவையை வீடு தேடி வந்து ஆள் அழைத்த அந்தக் காலம் மீண்டும் வருமா என இன்றைய நவீனதொழிநுட்ப யுகத்தில் நினைவு கூரவேண்டிய துர்ப்பாக்கிய நிலைக்கு இம் மக்கள் தள்ளப்பட்டுள்ளார்கள்.

அது நிற்க: பருத்தித்துறை பஸ் டிப்போ அமைக்கப்பட்ட பின்புகூட அரசாங்கத்தால் நடத்தப்பட்ட பஸ் சேவையும் சிறப்பாக இயங்கியது! இந்த டிப்போவில் கடமையாற்றிய ஊழியர்களும் அதிகாரிகளும் பெரும்பாலும் இப்பகுதியைச் சேர்ந்தவர்களாக இருந்ததனால் இப்பகுதி மக்களின் பயணக் கஷ்டங்களையும் தேவைகளையும் உணர்ந்ததுடன் இந்த டிப்போவைத் தங்கள் டிப்போவாக நினைத்துப் பணியாற்றி வந்தமை, ஒரு காலகட்டத்தில் பருத்தித்துறை டிப்போ இலங்கையின் ஏனைய டிப்போக்களுடன் போட்டி போடக் கூடிய அளவுக்குச் சிறந்த முறையில் செயலாற்றியதற்குவழிவகுத்ததெனலாம்.

இந்த வகையில் பருத்தித்துறை டிப்போவால் ஆற்றப்பட்ட கொடிகாமம் இரவுப் புகையிரத இணைப்புச் சேவை குறிப்பிடற்குரியது! கொழும்பிலிருந்து காங்கேசன்துறை வரையுள்ள புகையிரத நிலையங்களில் எந்தவொரு நிலாவது காண முடியாதவாறு கொடிகாமம் புகையிரத நிலையத்தில் இரவு யாழ் தேவி வரும்வரைகாத்து நின்று அதில் வரும் வடமராட்சியின் பல்வேறு பகுதிகளையும் சேர்ந்த மக்களையும் அவரவர் இடம் கொண்டு சேர்க்கும் இரண்டு பஸ்கள் மூலம் நற்சேவைப் பணி புரிந்தது பருத்தித்துறை டிப்போ!

எச்சேவை ஆற்றப்படாவிட்டாலும் தவறாது பாடசாலை பஸ் சேவைகளை ஒரு காலத்தில் கல்லுவம், திக்கம், ஊடாகவும், கப்புது, அச்சுவேலி அல்வாய் ஊடாகவும், குடவத்தை, குஞ்சர் கடை, நாகர் கோவில் ஆகிய இடங்களுக்கும் காலையிலும்மாலையும் செம்மையான முறையில் சேவைகளாற்றி இப்பகுதி மாணவரின் கல்விப் பணியில் உறுதுணை புரிந்தது.

இன்றைய ஆடம்பர தனியார் வாகனங்கள் ஓடத் தொடங்கிய வேளையில்கூட தன்னிடமிருந்த குறைந்த தொகையான பஸ்களை ஒரு மாதிரி ''உருட்டி'' அவற்றுடன் போட்டி போடத் தக்க வகையில்அரச, கூட்டுத்தாபன தனியார் ஊழியர்களுக்கும் மாணவர்களுக்கும் பெரும் தொண்டாற்றியது. ஆவரங்கால் ஊடான கடுகதி பஸ் சேவை, நெல்லியடி-யாழ் கடுகதி சேவை என்பன இங்கு குறிப்பிடத்தக்கவை.

இத்தகைய முன்மாதிரியான பணிகளில் ஈடுபட்டு அரசுக்கும் மக்களுக்கும் நற்பணி புரிந்த இந்த டிப்போ இன்று இங்கிருந்து 20 மைல்களுக்கு அப்பால் சென்றுவிட்டது. இதனையடுத்து இப்பகுதியில் நடைபெற்றுவரும் கேவலமான பஸ்சேவைகளால் அதிருப்தியுற்றுள்ள இப்பகுதி பிரயாணிகள் பலவிதமானகேள்விகளையும் கேட்கிறார்கள்!

### கேள்விக் கணைகள்

அங்கிருந்து அதிகாலையில் புறப்பட்டுவருகின்ற முதல்பஸ் வழியில் பழுதடைந்துவிட்டால் அங்கு அறிவித்தல் கொடுத்து திருத்துபவர்கள் வர; அல்லது அறிவித்தல் கொடுப்பதற்குஏற்றதொடர்பு சாதனம் தேடி சாரதியும் நடத்துனரும் அலைந்துதிரிய, அப்படி அறிவித்தாலும் அங்குள்ளவர்கள், வேறு பஸ்ஸுடன்வர எவ்வளவு நேரம் செலவாகும்? அது வரும்வரையும் பாடசாலை மாணவர்களும் அரச, தனியார் கூட்டுத்தாபன ஊழியர்களும் எவ்வளவு நேரம் காத்திருப்பார்கள்? எப்போது பாடசாலைக்கோ அல்லது அலுவலகத்திற்கோ போய்ச்சேருவது?

இரண்டாம் மூன்றும் பாடங்களுடன் அடிக்கடி இப்பகுதி மாணவர்கள் பாடசாலைகளுக்குப்போனால் அங்கு அப்பாடங்களைக் கற்பிக்கும் ஆசிரியர்கள் எப்படிப் பாடத்திட்டத்தை முடிப்பது? பாடசாலைக்கும் அரைகுறையாய்ச் செல்லும் உயர்தர மாணவர்கள் ''எத்தனையோ'' எதிர்நீச்சல்களுக்கு மத்தியிலும் எப்படிப் பரீட்சை எழுதிப் பல்கலைக் கழகம் புக முடியும்? இப்படி அவர்கள் கேட்கிறார்கள்! பருவகாலச் சீட்டுப் பெறுவதற்கும் இங்குள்ளவர்கள் 20 மைல் தூரம் கடந்து சென்று அங்கும் கியூ வரிசையில் காத்துநின்று பெற வேண்டிய அவலநிலை தற்பொழுது ஏற்பட்டுள்ளது!

### வருமானம் 50 வீதம் வீழ்ச்சி

இந்த டிப்போ கடந்த மே மாதம் 15ம் திகதி மூடப்பட்டதன் பின்னர் முன்பு ஆற்றப்பட்ட சேவைகளிலும் சுமார் 25 வீதத்திலும் மேல் சரியாகச் சேவைகள் ஆற்றப்படுவதில்லை என அறியவருகிறது.

நெல்லியடி, குஞ்சர்கடை, அச்சுவேலி போன்ற முக்கிய இடங்களில் நேரக்கணக்காகக் கால்கடுக்கக் காத்துநின்று வௌவால்களைப்போல பிரயாணிகள் தொங்கிக்கொண்டு பயணம் செய்யும் 'பிளேன்' மினிபஸ்களையும், பஸ்களையும் பார்த்துக் கொட்டாவி விட்டுக் கொண்டு வானம் பார்க்கும் பாடசாலை மாணவச் செல்வங்களும் உழைக்கும் கரங்களும் மீண்டும் சுகமாய்த் தம்பணி தொடர வழி ஏற்படுமா? என பிரயாணிகள் கேட்கிறார்கள்,

## செய்திக் கடிதம்: கரவெட்டி நிருபர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# "ஆங்கில மொழியைக் கற்பதால் மாணவர் நன்மையடைவர்"

## பரிசளிப்பு விழாவில் யாழ். நீதவான்

(யாழ்ப்பாணம்)

''ஆங்கில பாடத்தின் அவசியம் பற்றி இப்போது எல்லோரும் உணர்ந்து விட்டார்கள். வருங்காலத்தில், சகலருக்கும், ஆங்கில அறிவு இருப்பது அவசியமாகும். உலக மொழி ஆங்கிலத்தையும் மாணவர்கள் கற்க வேண்டும். இதனால் மாணவர்கள் பல நன்மைகளைபெற முடியும்.''

அளவெட்டி அருணோதயக் கல்லூரிப் பரிசளிப்பு விழாவில் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்ட யாழ். நீதவான் திரு. சதாசிவம் நாகராசா மேற்கண்டவாறு கூறினார்.

கல்லூரி அதிபர் திரு. ரி. சிவபாதம் தலைமையில் நடந்த இவ்விழாவில் நீதவான் எஸ். நாகராசா தொடர்ந்து பேசுகையில் கூறியதாவது: மாணவர்கள் ஆசிரியர்களையும், பெற்றோர்களையும் குருவாக மதித்து கட்டுப்பாட்டுடன் வாழப் பழகிக்கொள்ள வேண்டும் அப்போதுதான் மாணவர்கள் கல்வி கற்றதினால் ஏற்படும் பலனையும் உயர்ந்த நிலையையும் அடைமுடியும்.

''நாங்கள் கல்விகற்கும் போது ஆசிரியர்களை குருவாக மதித்தோம், இன்று அவர்களைக் கண்டால் பண்புடன்மரியாதை செலுத்துகிறோம். ஆனால் தற்போது சில மாணவர்கள் ஆசிரியர்களையும், பெற்றோர்களையும் உதாசீனம் செய்கிறார்கள். நாட்டில் குற்றச்செயல் அதிகரிப்பதற்கு குருபக்தி இல்லாததும்ஒருகாரணமாகும். எனவே மாணவர்கள் படிக்கும் போதும் வாழும்போதும் பெற்றோர்களையும், பெரியார்களையும் மதித்து வாழப் பழக வேண்டும்.

''தமிழ் மக்கள் பண்புள்ளவர்கள், அன்புள்ளவர்கள் என்று அன்று தொட்டு பலராலும் போற்றப்படுபவர்கள். அந்த நற்பெயரை நாம் தொடர்ந்தும் காப்பாற்ற வேண்டும்.

''கல்வியின் நோக்கம் பரீட்சையில் சித்திபெறுவது மட்டுமல்ல. வருங்காலத்தில் நற்பிரஜைகளாக வாழ்வதற்கேயாகும். ஒழுக்கம் இல்லாத கல்வியில்நாட்டிற்கும், மக்களுக்கும் பலன்கிடையாது பெற்றோருக்கு புகழ் தேடிக் கொடுக்கும் அளவிற்கு பிள்ளைகள் வாழப் பழக வேண்டும். கல்வியின் நோக்கம் கல்லூரியை விட்டு வெளியேறும்போதே ஆரம்பிக்கிறது. தொழிலுக்காக கல்வியை கற்பதனால் முழுமனிதனாக வாழ முடியாது.''

யாழ். பிரதம கல்வி அதிகாரி திரு. ஆர். சுந்தரலிங்கம் ஸ்தாபகர் நினைவு உரை நிகழ்த்தினார். திருமதி நாகராசா மாணவர்களுக்கு பரிசில்களை வழங்கினார். (க)

# வி. சேவை அலுவலர்க்கு அடையாள அட்டைகள்

(சித்தன்கேணி)

யாழ், மாவட்ட விசேட சேவை அலுவர்களுக்கு அடையாள அட்டைகள் வழங்கப்படவிருக்கின்றன. இதற்கான ஏற்பாடுகளை திட்ட அமுலாக்கல் அமைச்சு மேற்கொண்டுள்ளது.

யாழ். மாவட்ட விசேட சேவை அலுவலர்களை வவனியா அரசாங்க செயலகத்துக்கு நாளை அடையாள அட்டைகள் பெறுவதற்கு வருமாறு திட்ட அமுலாக்கல் அமைச்சு அறிவித்துள்ளது.

வவனியா அரசாங்க செயலகத்துக்கு செல்லத் தவறினால் கொழும்புக்குச் சென்றே அடையாள அட்டைகளைப் பெற்றுக் கொள்ள முடியும் என்றும் அச்சுற்று நிருபத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது.

## தமிழ்த்தினவிழா

(பண்டத்தரிப்பு)

பண்டைத்தரிப்பு மகளிர் கல்லூரியில் தமிழ்த்தினவிழா எதிர்வரும் புதன்கிழமை நடைபெறவுள்ளளது.

கல்லூரி அதிபர் திருமதி க. ஆறுமுகதாசன் தலைமையில் நடைபெறவுள்ள இவ்விழாவில் பிரதம அதிதியாக யாழ். கல்வித் திணைக்கள கல்வி அதிகாரி திரு.வே. சபாநாயகம் கலந்துகொள்வார்.

## சித்த மருத்துவ கல்லூரி

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாண பல்கலைக் கழக கைலாசபதி அரங்கில் சித்த மருத்துவக் கல்லூரி ஆரம்ப வைபவம் இன்று திங்கட்கிழமை மாலை மூன்று மணிக்கு நடைபெறும்.

துணைவேந்தர் பேராசிரியர் சு. வித்தியானந்தன் தலைமையில்நடைபெறும் இவ்விழாவில் வடஇலங்கை சித்த ஆயுள் வேத மருத்துவர்கள் சம்மேளனத்தின் முக்கிய பிரமுகர்கள் உட்பட பல்கலைக் கழக விரிவுரையாளர்களும், பேராசிரியர்களும் பங்குபற்றுவர்.

## 'வித்தி' மணிவிழா

[பண்டத்தரிப்பு]

யாழ் பல்கலைக்கழக உபவேந்தர் பேராசிரியர் சு. வித்தியானந்தனுக்குமணிவிழா காரைநகர்சுந்தரமூர்த்திநாயனார்வித்தியாலயத்தில்எதிர்வரும் வியாழக்கிழமை நடைபெறவுள்ளது.

வித்தியாலய அதிபர் திரு. செ. தேவதாசன் தலைமையில் நடைபெறவுள்ள இவ்விழாவில் புதிய கட்டிடத்திறப்பு விழா வைபவமும் இடப்பெறவுள்ளது.

# "போட்டிகள் மூலம் மாணவர்கள் திறமை வளர்க்கப்பட வேண்டும்"

[யாழ்ப்பாணம்]

''குழந்தைகளிடம் இயல்பாகவே பல்வகை ஆற்றல்கள் பொருந்தியுள்ளன. மறைந்துகிடக்கும் இவ்வாற்றல்களை மாணவருக்கு வெளிப்படுத்தி, பயிற்சி அளித்து வளர்த்துவிட வேண்டும். பேச்சு, பாட்டு, நடிப்பு, ஓவியம் ஆகிய கலை நிகழ்ச்சிகளில் ஈடுபடும் வாய்ப்பை மாணவருக்கு நிறைய வழங்கவேண்டும். பாடசாலைகள்தோறும் மன்றங்கள் அமைத்தும், போட்டிகள் நடத்தியும் இத்திறமைகளை வளர்ப்பது அவசியமாகும். முன்னர் பாடசாலைகளில் பல்வேறு சங்கங்கள் இருந்தன. எல்லா மாணவர்களும் பேசவேண்டும்என்ற விதி இருந்தது. போட்டிகளை நடத்திப்பரிசு வழங்கினர். இன்று பொதுவாக இத்திறன்களை வளர்ப்பது அருகிவருகின்றது, இன்று மாணவரிடையே தேர்வில் வெற்றி பெறுவதற்கான போட்டி மிகுந்துள்ளது. பாடசாலை நேரத்துக்கு முன்னும் பின்னும் தனியார் கல்வி நிலையங்களை நாடி மாணவா ஓடுகின்றனர். ஓய்வின்றிப்படிக்கிறார்கள். வேறெதற்கும் நேரமில்லை. இந்நிலை நீடித்தால் பெரிய தீமைகள் ஏற்படும், ஆற்றலற்ற மனிதர்களே தோன்றுவார்கள். எனவே தமிழ் தினப்போட்டி முதலியவற்றின் மூலமும் விளையாட்டு நிகழ்ச்கள் மூலமும் மாணவர் திறன்களும் பண்பாடும் வளர்க்கப்படவேண்டும்.'

இவ்வாறு வண்ணை. இளைய தம்பி வித்தியாலயத் தமிழ் தின விழாவில் சிறப்பு விருந்தினராகக் கலந்து கொண்ட நல்லூர் வட்டாரக் கல்வி அதிகாரி திரு. சு. சிவநாயக மூர்த்தி தமது சிறப்புரையில் குறிப்பிட்டார்.

அதிபர் திரு. கா. கணேசதாசன் மலையகப் பாடசாலைகளில் ஆற்றிய சேவையைப் பாராட்டிய வட்டாரக் கல்வி அதிகாரி அவரது சேவையால் இப்பாடசாலை முன்னோடிப் பாடசாலையாக உயர்ந்துவிட்டது'' என்றார்.

சட்டத்தரணி ஆர். பி. சபாரத்தினமும், பாரியாரும் முதன்மை விருந்தினர்களாகக் கலந்துகொண்டனர். திருமதி சபாரத்தினம் பாடசாலை நிலைத் தமிழ்தினப் போட்டிகளில் வெற்றிபெற்றோருக்கான பரிசில்களை வழங்கினர், பேச்சு, அபிநயப்பாடல், பாஓதல் ஆகிய நிகழ்ச்சிகளும் இடம்பெற்றன.

## ''விவசாயி அதிக வருமானம்பெற

# நோயிலிருந்து பயிரை பாதுகாக்கவேண்டும்''

(யாழ்ப்பாணம்)

''பயிர்ச்செய்கையிலிருந்து அதிக வருமானத்தை ஓர் விவசாயி பெறவேண்டுமானால் அந்த விவசாயி, அப்பயிரை நோய் நொடியின்றி பாதுகாப்பது மிகவும் முக்கியமானது ஓர் விவசாயி தனது பயிர்ச் செய்கையில் எவ்வளவு புது முறைகளைக் கையாண்டாலும் நோய் - பூச்சி முதலியன வற்றிலிருந்து பயிரினத்தைக் காப்பாற்ற முடியாவிட்டால் அப்பயிர்ச் செய்கையிலிருந்து பலனை எதிர்பார்க்க முடியாது'' என்று 'லங்கெம்' விவசாய இரசாயனப்பொருள் யாழ். மாவட்ட அலுவலகத்தை திருநெல்வேலி ஆராய்ச்சி நிலையப் பொறுப்பதிகாரி திரு. த. குகநாதன் ஆரம்பித்துவைத்துப் பேசுகையில் கூறினார்.

அவர் மேலும் கூறியதாவது ''யாழ்ப்பாணக்குடா நாட்டில் விவசாயிகளின் நீண்டகாலத்தேவையைப் பூர்த்தி செய்யும் முகமாக விவசாய இராசாயனப் பொருட்களை விற்பனை நிலையத்தை ஆரம்பித்து வைப்பது குறித்து மிகவும் மகிழ்ச்சியடைகின்றேன். விவசாய உற்பத்தியை மேலும் அதிகரிப்பதற்கு விவசாயிகளுக்கு அன்றுட விவசாய இராசயனப் பொருட்களை உடனுக்குடன் வழங்கி நோய் நொடிகளைக் கட்டுப்படுத்துவதற்கு 'லங்கெம்' உதவுவார்கள்'' என்று எண்ணுகின்றேன்.

## மணிவாசகர் குருபூசை

(பண்டத்தரிப்பு)

காரைநகர் ஈழத்துச் சிதம்பரம் சிவன் ஆலயத்தில் மாணிக்கவாசகர் குருபூசை தினம் நாளை செவ்வாய்க்கிழமை நடைபெறவுள்ளது.

அன்றைய தினம் முற்பகலில் மணிவாசகருக்கு அபிஷேகமும், விசேட பூசையும் நடைபெறவுள்ளன.

மாலையில் காரைநகர் மணிவாசகர் சபைத் தலைவர் திரு. செ. தேவதாசன் தலைமையில் நடைபெறவுள்ள மணிவாசகர் விழாவில் சட்டத்தரணி இ. ஏகநாதன், திரு. வி. அருளானந்தம், செல்வி சகுந்தலா தேவி நடராசா, ஆகியோரின் சொற்பொழிவுகள் இடம்பெறவுள்ளன. சிவஸ்ரீ வன்மீகவிநாயகர் மாதர் முன்னேற்றச் சங்க மாணவிகளின் பண்ணிசையும் இடம்பெறவுள்ளது.

இதற்கான ஒழுங்குகளை காரைநகர் மணிவாசகர் சபையினர் செய்துள்ளார்கள்.

## காரைநகரில் சுகாதார வாரம்

(பண்டத்தரிப்பு)

காரைநகரில் தேசிய சுகாதார வாரத்தை முன்னிட்டு பல்வேறு நிகழ்ச்சிகளை நடாத்துவதற்கான ஏற்பாடுகளை காரைநகர் பொது சுகாதார பரிசோதகர் திரு. ஏ. இமானுவேல் செய்துள்ளார்.

தேசிய சுகாதார வாரத்தின் முக்கிய அம்சமான 'சிறுவர் சுகாதாரமும் நாளைய நலனும்' என்னும் விடயம் பற்றிய பொருட்காட்சியும் கருத்தரங்கும் இன்று திங்கட்கிழமையன்று காரைநகர் றெட்பானா சுகாதார நிலையத்தில் நடைபெறவுள்ளது.

சிறுவர்கள் நலன் கருதி காரைநகர்பகுதியிலுள்ள பாடசாலைகளில் சிறுவர் சுகாதாரம் பற்றிய கலந்துரையாடல்களை நடாத்தவும்: காரை நகர் அரசினர் மருத்துவ மனையில் சிறுவர்களுக்கு தொற்று நோய்த் தடுப்பு ஊசி ஏற்றுதல், பூச்சித் தடுப்பு மருந்துகள் வழங்கல் ஆகியவற்றை செயற்படுத்தவும் ஏற்பாடுகள் செய்யப்பட்டிருப்பதாக காரைநகர் பொது சுகாதார பரிசோதகர் தெரிவித்துள்ளார்.

## நந்தாவில் மனோன்மணி அம்பாள் உற்சவம்

[கொக்குவில்]

கொக்குவில் நந்தாவில் சுற்புலத்து மனோன்மணி அம்பாள் வருடாந்த உற்சவம் இன்று கொடியேற்றத்துடன் ஆரம்பமாகிறது.

இன்றுகாலைஒன்பதுமணிக்கு வசந்த மண்டபப் பூசையுடன் பத்து மணிக்கு கொடியேற்ற வைபவம் நடைபெறும்.

பத்தாம் திகதி சப்பறத் திருவிழாவும், பதினோராம் திகதி காலை தேர்த்திருவிழாவும், பன்னிரண்டாம் திகதி வியாழக்கிழமை தீர்த்தத் திருவிழாவும் அன்றுமாலை மூன்று மணிக்கு தீப பூஜையும் இடம் பெறும். வெள்ளிக்கிழமை மாலை பூங்காவனத் திருவிழாவும் நடைபெறும்.

# புங்குடுதீவில் வேதாகமப் பாடசாலை

[யாழ்ப்பாணம்]

''வேதாகம சாஸ்திரங்களை பூரணமாகப்பயின்று குருவாகுவதற்கு யாழ். சிவானந்த குருகுல பரிபாலனசபை வகுப்புகளை நடத்தி வருகிறது. அதன் முதல்படியாக புங்குடுதீவு மாணவர்களை சமஸ்கிருதம், ஆகமம் ஆகியஆரம்பப் பயிற்சி பெறுவதற்கு இங்கு யாழ். சிவானந்த குருகுலக் கிளைப் பாடசாலை தொடங்கப்பெறுகிறது.''

இவ்வாறு சிவாச்சாரியார் ஸ்ரீநிவாசநாகேந்திரக் குருக்கள் சிவானந்த குருகுல பரிபாலன பாடசாலையைப் புங்குடுதீவு பெருங்காடு சிவன்கோவில்வீதியில் உள்ள அலயமடத்தில் ஆரம்பித்துவைத்துப் பேசுகையில் கூறினார்.

புலவர் ஈழத்துச் சிவானந்தன் பேசுகையில் ''சைவாலயங்களில் குருமார்களாவதற்கு வேதாகமப்பயிற்சிஇன்றியமையாதது என்றும், இன்று ஆரம்பமாகும் சிவானந்த குருகுல கிளைப்பாடசாலை இப்பயிற்சிக்கு வழிவகுக்கும் என்றும் கூறினார்.

## ஆற்றில் குளிக்கத் தடை

(மன்னார்)

மடு மாதா ஆலயத்தில் ஜூலை 2ம் திகதி நடைபெறும் ஜூலை மாத திருநாள் உற்சவத்தில் கலந்து கொள்ள வரும் யாத்திரீகர்கள் தேக்கம் ஆற்றில் குளிப்பது தடை செய்யப்பட்டுள்ளது

தேக்கம் ஆற்றின்அடிப்பகுதியில் சுழி காணப்படுவதாலும் உயிர் ஆபத்துக்களைத் தடுப்பதற்காகவுமே குளிப்பதற்கு தடை விதிக்கப்பட்டுள்ளது.


சவூதி அரேபியா —
துறைமுக வேலைவாய்ப்பு
குறுகிய கால எல்லைக்குள் பிரயாணம்
விபரம்

★ விடுதி முகாமையாளர்
★ பொதி மேற்பார்வையாளர்
★ சேவ்ரி உத்தியோகத்தர்
★ போர்க்லிப்ற் ★ கிறைன்
★ ரெயிலர் ஒப்பரேட்டர்கள் (ட்ரைவர்கள்)
★ பொதுவேலையாட்கள் ★ வின்ஸ்மென்
★ றலி கிளார்க்குகள் ★ மெக்கானிக்குகள்
★ தொழிலக உதவியாளர் ★ போர்மன்கள்

வயதெல்லை: 21க்கு மேல் ஒப்பந்தகாலம்: 3 வருடம்
சாப்பாடு, தங்குமிடவசதி இலவசம்
8 மணித்தியாலத்துக்கு மேல் தொடர்ச்சியாக மேலதிக நேர வேலை உண்டு.
விண்ணப்பதாரர் பாஸ்போட் 6 புகைப்படத்துடனும், அனுபவச் சான்றிதழுடனும்
பின்வரும் முகவரிகளில் நேரில் தொடர்பு கொள்ளவும்.

எம். லோறன்ஸ், கூளாவடி, ஆனைக்கோட்டை.
பி. எஸ். சிங்கம், C/o டெஸ்மின், குமாரசுவாமி. இல, 1128, பாலையூற்று, திருகோணமலை.
ஆர். நாகராசா, 2-ம் ஒழுங்கை, முல்லைத்தீவு வீதி, பரந்தன்.

Safeway United &
Management Services (Pvt) Ltd.
Licence No. 439 (639)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ரயில் நிலையத்தில் கலாட்டா:

## உல்லாசப் பயணி கைது!

(மன்னார்)

தலைமன்னார் துறை ரயில் நிலையத்தில் கலாட்டா செய்து அங்குள்ள கண்ணாடியை உடைத்து நொருக்கிய ஐரோப்பிய உல்லாசப்பயணி ஒருவர் தலைமன்னார் பொலிசாரினால் கைது செய்யப்பட்டார்.

தலைமன்னார்—ராமேஸ்வரம் கப்பல் மார்க்கமாக இந்தியாவுக்குச் செல்வதற்கென் தலைமன்னார் துறை ரயில் நிலையத்திற்கு வந்த ஐரோப்பிய உல்லாசப் பயணி ஒருவர் கப்பல் ரிக்கற் பெறுவதில் ஏற்பட்ட தகராறின் போது ரயில் நிலைய கருமபீட கண்ணாடிகளை உடைத்து கலாட்டா செய்தார்.

இச்சம்பவம் பற்றி தலைமன்னார் பொலிசாருக்கு புகார் செய்ததையடுத்து ஸ்தலத்திற்கு விரைந்த தலைமன்னார் பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி கே. அரசரத்தினம் கலாட்டா செய்த ஐரோப்பிய உல்லாசப் பயணியை கைது செய்து விசாரணைக்குட்படுத்தினார். (சூ)

# 'ட்ரக்' மோதி மாணவன் மரணம்

(யாழ்ப்பாணம்)

பாடசாலைசென்ற இளைஞன் முள்ளியவளையில் ட்ரக் மோதி மரணமானான் குமாரசாமி கனகராசா (13 வயது) என்ற இளைஞனே மரணமானவராவார்.

முள்ளியவளை மத்திய மகா வித்தியாலயத்தில் 8ம் வகுப்பு படிக்கிறவர் இம்மாணவன்.

நடந்து சென்று கொண்டிருந்தபோது 'ட்ரக்' ஒன்றுடன் மோதி படுகாயமடைந்தார். உடனடியாக முல்லைத்தீவு ஆஸ்பத்திரிக்கு கொண்டு செல்லப்பட்டு பின்னர் அங்கிருந்து யாழ். ஆஸ்பத்திரிக்குக் கொண்டுவரப்பட்டார். நேற்றுக்காலை இவ்இளைஞன் இறந்துவிட்டார்.

இக்குடும்பத்தில் ஐந்து பெண்பிள்ளைகளுக்கு இவர் ஒருவர்தான் ஆண்பிள்ளை.

மரண விசாரணை அதிகாரி எஸ். எஸ். பிரான்சிஸ் விசாரணை செய்த பின்னர் பிரேத பரிசோதனைக்கு உத்தரவிட்டு தீர்ப்பு வழங்குவதை ஒத்தி வைத்தார்.

பதில் சட்ட வைத்திய அதிகாரி வைத்திய கலாநிதி என். சரவணபவானந்தன் பிரேதபரிசோதனை செய்தார்.

பிரேதபரிசோதனையின் பின் இளைஞனின் சடலம் தந்தையாரிடம் ஒப்படைக்கப்பட்டது. (மா)

## சம்பந்தம்இலங்கை திரும்பினார்

(வண்ணார்பண்ணை)

கடந்த இரு மாதங்களுக்கு முன் இந்தியாவிற்குச் சென்றிருந்த பொதுநலநாடுகளின் பனைவள ஆலோசகரும், இந்திய பனைத் தொழில் நிபுணருமான திரு. கே. சம்பந்தம் மீண்டும் இலங்கை திரும்பியுள்ளார்.

திரு. சம்பந்தம் மேலும் ஒரு வருட காலம் இலங்கையில் கடமையாற்ற பொது நலநாடுகளின் உணவு விவசாய நிறுவனம் ஏற்பாடு செய்துள்ளது.

பிரதேச அபிவிருத்தி அமைச்சரின் வேண்டுதலின் மீது இவர் மேலும் ஒரு வருடம் இலங்கையில் தங்கியிருந்து பனை வளம் தொடர்பான ஆலோசனைகளை இலங்கைக்கு வழங்கவுள்ளார்.

# சுவீப்முடிவுகள்

(கொழும்பு)

151-வது மகாஜன சம்பத சுவீப் முடிவுகள் வருமாறு:-

**முதலாவது பரிசு**
**16 G 0294**
ரூ. 2, 93, 700

**2-வது பரிசு**
**07 P 0542**
ரூ. 1, 46, 850

**3-வது பரிசு**
**19 M 0384**
ரூ. 48, 950

தலா 832 ரூபா 15 சதம் கொண்ட 100 ஆறுதல் பரிசுகள் வருமாறு:-

| | |
|---|---|
| 02 A 0353 | 04 A 0904 |
| 05 A 0803 | 08 A 0601 |
| 12 A 0863 | 13 A 0770 |
| 05 B 0658 | 06 B 0974 |
| 16 B 0046 | 16 B 0450 |
| 17 B 0926 | 11 C 0675 |
| 13 C 0476 | 17 C 0919 |
| 11 D 0116 | 15 D 0898 |
| 18 D 0640 | 18 D 0793 |
| 20 D 0187 | 04 E 0266 |
| 08 E 0441 | 17 E 0303 |
| 18 E 0799 | 18 E 0954 |
| 19 E 0460 | 05 F 0622 |
| 09 F 0336 | 13 F 0370 |
| 02 G 0913 | 03 G 0735 |
| 05 G 0831 | 14 G 0593 |
| 17 G 0903 | 04 H 0982 |
| 05 H 0910 | 07 H 0529 |
| 10 H 0195 | 12 H 0913 |
| 03 J 0047 | 05 J 0971 |
| 10 J 0322 | 13 J 0253 |
| 22 J 0157 | 16 K 0593 |
| 20 K 0523 | 05 L 0807 |
| 07 L 0211 | 07 L 0805 |
| 14 L 0767 | 19 L 0729 |
| 20 L 0077 | 22 L 0014 |
| 05 M 0864 | 06 M 0312 |
| 03 M 0735 | 10 N 0933 |
| 11 N 0371 | 19 N 0234 |
| 20 N 0473 | 10 O 0156 |
| 12 O 0028 | 01 P 0801 |
| 06 P 0490 | 08 P 0816 |
| 09 P 0162 | 11 P 0238 |
| 11 P 0978 | |
| 20 P 0826 | 11 Q 0547 |
| 11 Q 0596 | 14 Q 0947 |
| 17 Q 0136 | 01 R 0761 |
| 06 R 0108 | 06 R 0745 |
| 08 R 0480 | 12 R 0706 |
| 14 R 0332 | 17 R 0139 |
| 02 S 0089 | 12 S 0752 |
| 15 S 0347 | 06 T 0287 |
| 08 T 0646 | 13 T 0912 |
| 04 U 0103 | 04 U 0439 |
| 06 U 0495 | 07 U 0790 |
| 15 U 0924 | 01 W 0783 |
| 03 W 0103 | 07 X 0240 |
| 13 X 0209 | 14 X 0928 |
| 17 X 0583 | 20 X 0199 |
| 20 X 0402 | 17 Y 0618 |
| 11 Z 0645 | |

இவையாவும் உறுதிப்படுத்தப்பட வேண்டும்)

## மலேசியா பயணமானார்




(யாழ்ப்பாணம்)

மலேசியா, கோலாலம்பூர் ஸ்ரீகந்தசுவாமி கோவில் மஹா கும்பாபிஷேகவிழாவில் கலந்து கொள்வதற்காக, சண்டிலிப்பாய் கல்வளைப் பிள்ளையார் கோவில் ஆதீனகர்த்தாவும், கண்டி கட்டுக்கலை ஸ்ரீ செல்வ விநாயகர் கோவில் முன்னாள் பிரதம குருவும், இணுவில் சிவகாமிஅம்பாள் ஆலய குருவுமாகியபிரம்மஸ்ரீ இ. சோமாஸ்கந்தக்குருக்கள் கோலாலம்பூர் பயணமானார்கள்.

இவருடன், உரும்பராய் கருணாகரப்பிள்ளையார்கோவில் ஆதீன கர்த்தாவும், பிரதம குருவுமான பிரம்மஸ்ரீ வை. சபாரத்தினக்குருக்களும் சென்றுள்ளார்.

## உத்தம அதிபர்



தவநெறியே சிவநெறி என்றுணர்ந்தபடி வாழ்ந்து அமரரானார் அதிபர் சி. சிவப்பிரகாசம்.

மேல்கரவையில் இறையடி மறவாப் பேரன்பன் திரு. சிற்றம்பலம் அவர்களின் இளமகனாகப்பிறந்து கலைபல பயின்று ஆசிரியப்பணி செய்த அமரர் அண்ணாமலைப் பல்கலைக்கழகம் சென்று கலைமாணிப் பட்டதாரி ஆனார் அத்துடன் கல்வியில் 'டிப்ளோமா' ஆகவும் தேறிக் கல்வியுலகில் தாரகையாகி யாழ். இந்துக்கல்லூரியில் ஆசிரியரானார்.

பின்னர் பருத்தித்துறை ஹாட்லிக் கல்லூரியிலும், கரவெட்டிஞானசாரியார்கல்லூரியின் அதிபராகவும் அரும்பணியாற்றிப் பெரும்புகழீட்டினார். சுமார் 20ஆண்டுகாலம் இக்கல்லூரியோடு இரண்டறக் கலந்து தன்னை அதன் வளர்ச்சிக்கே அர்ப்பணித்தார்.

உண்மை, கல்வி செல்வம் என்ற பலநலன்களும் கைவரப்பெற்ற பேரமைதி, வாழ்வு கண்ட அமரர் சேவைசெய்த இடங்களிலெல்லாம் மாணவரதும், ஆசிரியரதும், சமூகத்தினதும் பெருமதிப்பையும் அன்பையும் சம்பாதித்து வாழ்ந்தார்.

அறவாழ்வு பெருவாழ்வுஎனக் காட்டிய அன்னாரின் சாதனை நிலையங்களாகக் கல்லூரிகள் விளங்கியதை நம்மிற்பலர் அறிவோம்! அத்தகைய ஓர் அதிபர் திரு. சி. சிவப்பிரகாசம் அவர்கள் நீள நினைந்து ஏத்திய நிமலன் பேறுற்றார்.

—க. இளங்கோ

# இன்றைய பலன்

மாதம் — ஆனி
திகதி — 18 (02-07-1984)
வாரம் — திங்கள்
திதி — சதுர்த்தி பின் இரவு 2-09 வரை
நக்ஷத்திரம் — ஆயிலியம் பிற்பகல் 5-05 வரை

மேடம்; இன்னல்கள் அதிகம் தொல்லை தரலாம் வியாபாரத்துறையில் சமவருவாய்க்கும்இடமுண்டு விட்டுக்கொடுக்கும் மனப்பான்மை வெற்றிக்கு வழிகாட்டும்.

இடபம்: பெரியோர்களினால் பெருமைக்கு இடமுண்டு இனபந்துக்கள் உங்களை உற்சாகப்படுத்துவர் நீண்டநாள் பூமிப்பிணக்கு இன்று நிவர்த்தியாவதற்கு இடமுண்டு

மிதுனம்: எதிர்பார்த்த விடயம் இடையில் தடைப்படலாம் சிலர்வாழ்க்கையில்கூடன் தொல்லை அதிகரிக்கும் சகோதர வழியால் சஞ்சலத்திற்கிடமுண்டு.

கடகம்: அன்னை வழி ஆதரவு தாராளமாகக் கிடைக்கும் அறிஞர்களின் தொடர்புகளும் கிடைக்கலாம் பொருள்வரவிற்குமிடமுண்டு சிறப்பானதினம்

சிங்கம்: மக்களால்மகிழ்ச்சி புதுமையில் நாட்டம் பிறக்கும் குடும்ப பிரச்சினைகளில் சுமுகமான நிலை தென்படும் இன்று பொன்னான தினம்.

கன்னி: முன்னேற்றம் தடைப்படும் எதிரிகளின்சூழ்ச்சிகள் பலபாகவிருக்கும் உடல் நலத்தைப் பேணி நடக்கும்.

துலாம்: குடும்பத்தில் மகிழ்ச்சிகரமான சூழ்நிலை தென்படும் காதல் வானில் சஞ்சரிப்பவர்களுக்கு கனிவான தினம் களஸ்திர வழியாலும் நன்மைகளுக்குமிடமுண்டு.

விருச்சிகம்: தொழில்துறையில் எதிர்பாராதநஷ்டத்திற்கு இடமுண்டு புதிய முதலீடுகளை பின்போடவும் உடல் நலத்தைப் பேணி நடக்கவும்.

தனுசு: நீண்ட நாள் பிரச்சினையில் சமரசமுடிவு காணப்படும், தனவரவிற்குமிடமுண்டு பிதாவழி ஆதரவும் கிடைக்கும்

மகரம்: முயற்சியால் முன்னேற்றம் உண்டு பாராட்டுதலுக்கும் இடமுண்டு கடமை புதிய ஆர்வம் கிடைக்கும் சிலருக்கு இடமாற்றமும் ஏற்படலாம்.

கும்பம்; வரவில் உயர்வு தென்படும் பெரியோர்களின் ஆதரவிற்கும் இடமுண்டு பொதுவாக கலைஞர்களுக்கு சிறப்பான தினம் புதினத்திற்கும் இடமுண்டு.

மீனம்: வியாபாரத் துறையில்மந்தநிலை காணப்படும் எதிலும் தடுமாற்றம் ஏற்படும் எதிர்பாராத பொருள் விரயத்திற்கும் இடமுண்டு.

திருமலை
வே. ரவீந்திரன்


குரேஸ் ட்ரவல் சேவிசஸ் பிறைவேற் லிமிட்டெட்
(CROSS TRAVEL SERVICES (Pte) LTD.)
ஸ்தாபனத்தாரின் மற்றுமோர் சேவை :-
குரேஸ் சர்வதேச தொலைத்தொடர்பு சேவை
(Cross International Telecommunication Services)

FOR ALL INTERNATIONAL AND LOCAL DIRECT DIALLING TELEPHONE CALLS.

INTERNATIONAL TELEX SERVICES :- NO DELAY AT ALL, CHEAP RATES, CONTACT US RIGHT NOW

குரேஸ் சர்வதேச தொலைத்தொடர்பு சேவை.
(i) சர்வதேச, உள்ளூர் நேரடி தொலைத்தொடர்பு சேவை
(ii) சர்வதேச ரெலெக்ஸ் சேவை.

உலகின் எப்பாகத்திற்கும குறைந்த கட்டணத்தில் நேரடிச் சர்வதேச தொலைத்தொடர்பு சேவையும், ஒரு நொடிப்பொழுதில் பெற்றுக்கொள்ள உடன் நாடுங்கள்

CTS

Cross International Telecommunication Services
STAGE II, FIRST FLOOR, BUS STAND CENTRE ROAD.
MODEL MARKET, JAFFNA.
Phone No: 22040, 22065. Telex No: [illegible] (C. I. T. S.)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நடேஸ்வராவுக்கு

# உள்ளக விளையாட்டரங்கு அடுத்த ஆண்டில் கிடைக்கும்

(யாழ்ப்பாணம்).

''யாழ் மாவட்டத்தில் துரித கெதியில் வளர்ந்து வரும் பாடசாலைகளில் நடேஸ்வரக் கல்லூரியும் ஒன்ருகும். கல்வித் துறையில் மட்டுமல்ல விளையாட்டுத்துறையிலும் பல சாதனைகளை ஏற்படுத்தி, கல்வித்திணைக்களப் போட்டிகளில் முதலிடம் பெற்று இக்கல்லூரி இன்று வளர்ச்சிப் பாதையில் முன்னேறி வருகின்றது.

இவ்வாறு காங்கேசன்துறை நடேஸ்வரக்கல்லூரிவருடாந்த இல்ல மெய்வல்லுநர் போட்டியில் பிரதமஅதிதியாகக் கலந்து கொண்ட வட்டாரக் கல்வியதிகாரி திரு. பொ. சிவஞான சுந்தரம் பரிசளிப்புரையில் கூறிஞர். தொடர்ந்து அவர் பேசுகையில் இக்கல்லூரிக்கு அதன் வளவினுள்ளேயே ஒரு விளையாட்டு மைதானம் இல்லாததால் ஏற்படும் கஷ்டங்களைப் பற்றி அதிபர் திரு. து. பாலசிங்கம் எடுத்துக் கூறிஞர் இவ்வாறு ஓர் உள்ளக விளையாட்டு மைதானம் அமைப்பதற்கு வசதியாக இரு துண்டுக் காணிகளைத் திணைக்களம் சுவீகரித்துத் தரவேண்டும் என்று அவர் கேட்டுக்கொண்டார். ஒவ்வொரு பெரிய கல்லூரிக்கும் அதன் பிரதான கட்டிடங்கள் அமைந்த வளவினுள்ளேயே விளையாட்டுமைதானம் அமைந்திருப்பதுதான் விரும்பத்தக்கது. இவ்வாண்டு நிதி ஒதுக்கீட்டில் காணி சுவீகரிப்புக்குப் பணம் ஒதுக்கப்படவில்லை. அடுத்த ஆண்டில் இவ் விஷயத்துக்கு முன்னுரிமை வழங்கி உரிய நடவடிக்கை எடுக்கப்படும் என்று கூறிஞர்.

இம்மெய் வல்லுநர் போட்டியில் வள்ளுவர் இல்லம் வெற்றிக் கேடயத்தைத் தட்டிக் கொண்டது.

உடுவில்

## உதயசூரியன் புதிய நிர்வாகிகள்

(யாழ்ப்பாணம்)

உடுவில் உதயசூரியன் சனசமூக நிலைய வருடாந்தப் பொதுக்கூட்டம் கடந்தமாதம் 27ந் திகதி தலைவர் சி. செல்லத்துரை தலைமையில்நடைபெற்ற போது புதிய உத்தியோகத்தர் தெரிவு இடம் பெற்றது.

தலைவர்: சி. செல்லத்துரை, உப தலைவர்: க. சின்னராசா, செயலாளர்: த. எட்வின், உப செயலாளர்: இ. சந்திரபாலா, பொருளாளர்: நா. கருணசீலன், உப பொருளாளர்: து. டலஸ், 3 நிர்வாகசபை உறுப்பினர்கள் தெரிவு செய்யப்பட்டதுடன், விளையாட்டுத்துறை கலைத்துறைக்கும் தலைவர், உப தலைவர் தெரிவுஇடம்பெற்றது


**ராணி** (யாழ். நகர்)
தினசரி 10-30, 2-30, 6-15
சிவாஜி -சரோஜாதேவி
**இருவர் உள்ளம்**

**ஹரன்** (யாழ்.நகர்)
தினசரி 10-30,2-30, 6-30
எம்.ஜி.ஆர் - ஜெயலலிதா
**நீரும் நெருப்பும்**
கலர்

**மனோகரா** (யாழ் நகர்)
தினசரி 10-30, 2-30, 6-30
எம்.ஜி.ஆர்- ஜெயலலிதா
**தாய்க்குத் தலைமகன்**
(புதிய பிரதி)

**சாந்தி** (யாழ். நகர்
10-30, 2-30, 6-30
ஜெமினி - ஜெய்சங்கர்
**அன்புக்கோர் அண்ணன்**
(புதிய பிரதி)

**ஸ்ரீதர்** (யாழ். நகர்)
தினசரி 10-30, 2-30, 6-00
சிவாஜி — கீதா
**மோகனப் புன்னகை**

**வின்சர்** (யாழ் நகர்
தினசரி 10-30, 2-30, 6-30
கடைசி வாரம்
எம் ஜி.ஆர். ஜெயலலிதா
**ஒளிவிளக்கு**
(புதிய வண்ணப் பிரதி)

**ராஜா** (யாழ். நகர்)
தினசரி 10-30, 2-30,6-30
ரவிச்சந்திரன் லதா
**சொர்க்கத்தில் திருமணம்**
(கலர்) புதிய பிரதி

Now Showing
குறிப்பிட்ட சில தினங்கள் மட்டும்
**ரீகல்** (யாழ். நகர்)
10-30,2-15, 4-30, 6-30
Burt Lancaster.
TWILIGHT'S LAST GLEAMING
பயங்கரவாதிகள் அமெரிக்க ஜனதிபதியை பணயக் கைதியாக்கிஅவர்உயிருக்கே ஆபத்தை உண்டாக்கும் திகிலூட்டும் சண்டைப் படம்

**லிடோ** யாழ். நகர்
தினசரி 10-30, 2-30, 6-15
ஜெமினி - சாவித்திரி
**கற்புக்கரசி**

**வெலிங்டன்**
(யாழ். நகர்)
10-30,2-15, 4-30, 7-00
Mark Hamill
Harrisson Ford
in
THE EMPIRE STRIKES BACK
(Action Packed Thriller)

## எங்கள் இன்றைய வெளியீடு

★ சிவகுமார், சரிதா நடித்த
**ஒரு வேங்கை வெள்ளாடாகிறது**
(THOMSON ORIGINAL)

★ எம், ஜி. ஆர். ஜெயலலிதா நடித்த
**அன்ன மிட்டகை**
(V. G. P. ORIGINAL)

உங்கள் ஓடர்களுக்கு உடன் முந்துங்கள்

## குணம் வீடியோ சென்டர்

42, மணிக்கூட்டு வீதி, யாழ்ப்பாணம்.
தொலைபேசி: 23665 (638)

## கணக்கு எழுதுவினைஞர் தேவை

உகந்தவர் நிறுவனப் பதிவேடுகள் எழுதக்கூடியவராய் ஆங்கிலத் தட்டெழுத்து அறிந்தவராய் இருப்பார்.

**தகைமை**
க. பொ. த. உயர்தரம் மூன்று சித்திகள்
க.பொ.த. சாதாரணம் ஆங்கிலம் திறமைச் சித்தி

வயது 30ற்குக் கீழ்.

ஆங்கிலம் பேசுதல் எழுதுதல் அவசியம்.
சிபார்சு செய்யக்கூடியவர்கள் இருவரின் பெயரைக் குறிப்பிடவும்.

**5-ந் திகதிக்கு முதல் விண்ணப்பியுங்கள்.**

**SKYLARK**
449. STANLEY ROAD,
JAFFNA. 634


புங்குடுதீவு - நயினதீவு
பலநோக்குக் கூட்டுறவுச் சங்கம்

## பதவி வெற்றிடம்

### கிளை முகாமையாளர் தரம் III

மேற்படி பதவிக்கு விண்ணப்பிக்க விரும்புவோர் விபரங்களையும் விண்ணப்பப் படிவங்களையும் 60-/ சத முத்திரை ஒட்டி சொந்த விலாசமிடப்பட்ட கடித உறைகளை அனுப்பி அல்லது நேரில் வந்து சங்கப் பணிமனையில் பெற்றுக்கொள்ளலாம். விண்ணப்பத்திற்கு ரூபா 2/- பெறுமதியான முத்திரை அனுப்பப்பட வேண்டும்.

**விண்ணப்ப முடிவு திகதி: 16-07-84**

**பொதுமுகாமையாளர்**
புங்குடுதீவு - நயினதீவு
ப. நோ. கூ. சங்கம்,
புங்குடுதீவு

632

# நன்றி நவிலலும் அந்தியேட்டி அழைப்பும்

## மா. பாலசுந்தரம்

(உரிமையாளர், பாலன் ஸ்ரோர்ஸ், சுன்ஞகம்)



அன்புக்கோர் உறைவிடமாய், அடக்கத்துக்கோர் அணிகலனய், குடும்பத்திற்கு ஓர் ஒளி விளக்காய் இருந்து எம்மையெல்லாம் ஆருத்துயரில் ஆழ்த்தி விட்ட எனது அன்புத் தெய்வம் அமரர் மா. பாலசுந்தரம் (உரிமையாளர், பாலன் ஸ்ரோர்ஸ், சுன்ஞகம்) 2-6-84 இல் இறைவனடி எய்திய அவர்களின் இறுதிச் சடங்கில் கலந்து கொண்டவர்க்கும், அநுதாபச் செய்திகளை அனுப்பியவர்க்கும், ஆறுதல் கூறியவர்க்கும் மனப்பூர்வமான நன்றிகளைத் தெரிவித்துக் கொண்டு, அன்னரின் அந்தியேட்டிக் கிரியையும், சபிண்டீகரணமும் (2-7-84) இல் இன்று அன்னரின் இல்லத்தில் நடைபெறுவதால் உற்ருர், உறவினர், நண்பர்கள் இதில் கலந்துகொள்ளுமாறு வேண்டி, அன்னரின் ஆத்ம சாந்திக்காக பிரார்த்திக்குமாறு அன்புடன் வேண்டிக்கொள்ளும்!

**மனைவி:- திருமதி பா. சிவரஞ்சிதமலர்,**
**பிள்ளைகள்:- மயூரன் – மயூரதா**

643

# கோட்டு விற்பனவு விளம்பரம்

### யாழ்ப்பாண டிஸ்திறிக் கோட்டில்

1. சிவானந்தன் சிவலோகநாதனும் பெண் ஈஸ்வரஜனனியும் 6, டிக்ஸ்மன் றேட், பம்பலப்பிட்டி, முதலாம் இரண்டாம் வழக்காளிகள் தங்கள் தத்துவக்காரி குகனேஸ்வரி 6/2 மகாத்மா காந்தி வீதி, யாழ்ப்பாணம்.
வழக்காளிகள்

ஈடு: 1268

எதிராக

1. அம்பலவாணர் சித்தம்பலம் கைம்பெண் கண்மணி இணுவில் மேற்கு.
2. பஞ்சலிங்கம் இரத்தினசிங்கம் இணுவில் மேற்கு.

எதிராளிகள்

1. யாழ்ப்பாண டிஸ்திறிக் கோட்டின் ஈடு 1268ம் இலக்க வழக்கில் எனக்கு கிடைத்த கோட்டு கட்டளைப்படி பின்னல் விபரிக்கப்படும் இரண்டு காணிகள் 1984ம் ஆண்டு ஆடி மாதம் 30ம் திகதி திங்கட்கிழமை முற்பகல் 10 - 11-30 மணிக்கு அந்த காணிகளுக்குள் நின்று என்ஞல் பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்.

### தீர்வைத் தொகை

2 முதல் வட்டி ரூபாய் 19400/- வும் மேலும் ரூபாய் வருடமொன்றுக்கு நூற்றுக்கு 24வீத வட்டியும் வழக்கு அணைத்த திகதி 1-10-79 துவக்கம் 4-6-81 வரைக்கும். அதன்பின் தீர்வை முழுத் தொகைக்கும் இறுக்கப்படும்வரை வருடம் ஒன்றுக்கு நூற்றுக்கு 12 வீத வட்டியும் வழக்கு செலவு ரூபாய் 2700/- எதிராளிகள் இந்த ஈட்டு உறுதியின் பேரால் ரூபாய் 10,000/- வழக்காளிக்கு 25-8-82 இல் செலுத்தினுர்கள். கோட்டுக் கொமிசன் ஓர் பாகம் ரூபாய் 250/- கொடுக்கப்பட்டது.

### ஆதன விபரம்

3. வடமாகாணம் யாழ்ப்பாணம் டிஸ்திறிக் வலிகாமம் வடக்குப் பகுதி உடுவில் கோவில் பற்று இணுவில் இறை ''சேவுகன் காடு'' நிலப்பரப்பு 6. இதில் கிழக்குப் பக்கமாக நிலப்பரப்பு 4. செய்பயிர், வான்பயிர், கல்வீடும் இக்காணியில் வடக்கு எல்லைக் காணியின் கிழக்கு எல்லையில் இருக்கும் கிணற்றில் பங்கும் வழி, வாய்க்காலுரித்தும் இதற்கு எல்லை கிழக்கு கந்தர் கதிர்காமர் மகள் உமாமகேஸ்வரியின் ஆதனம். வடக்கு முங்கை முகப்பும் சின்னத்தம்பி பஞ்சலிங்கம் கைம்பெண் நாகம்மாவுக்கும் சிவகுரு சுப்பிரமணியம் பெண் இராசம்மாவுக்கும் உரிய ஆதனம். மேற்கு சின்னத்தம்பி பஞ்சலிங்கம் கைம்பெண் நாகம்மாவின் ஆதனம். தெற்கு நல்லதம்பி சுப்பிரமணியத்தின் ஆதனம். இதடங்கலும் இதைச் சேர்ந்தவைகளும்.

3. மேற்படி இணுவில் இறை ''பலட்டைஒல்லை'' பரப்பு 5 குழி 7¼ம் கிணற்றின் பங்கும் எல்லை கிழக்கு சபாபதி ஆனந்தர் பெண் சின்னம்மாவின் ஆதனம் வடக்கு வயிரவநாதன் சரவணமுத்துவின் ஆதனம். மேற்கும், தெற்கும் சிதம்பரநாதர் மாணிக்கத்தின் உரிமையாளரின் ஆதனம். இதடங்கலும், இதைச்சேர்ந்தவைகளும்.

**ப.நா.தருமலிங்கம்**
கொம்மிசனரும், விலைமதிப்பாளரும்.

126, வாசிகாலை ஒழுங்கை
3ம் கட்டை, கல்வியன்காடு.
8-6-84

604

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கூட்டுறவு ஊழியர் இன்று வேலைநிறுத்தம்

## உடன் நடவடிக்கை எடுக்குமாறு தொழிற்சங்க நடவடிக்கைக் குழு கோரிக்கை

(யாழ்ப்பாணம்)

''கூட்டுறவு ஊழியர் தொழிற்சங்கத்தினரின் கோரிக்கை மிகவும் நியாயமானது. அவர்களால் இன்று மேற்கொள்ளப் படவிருக்கும் ஒருநாள் அடையாள வேலை நிறுத்தத்துக்கு நாமும் பூரண ஆதரவு வழங்குகின்றோம். நீண்டகாலமாகத் தீர்த்து வைக்கப்படாமலிருக்கும் அவர்களது கோரிக்கைகளை உடன் தீர்த்துவைக்க நடவடிக்கை மேற்கொள்ளவும்'' என்று, தொழிற்சங்க நடவடிக்கைக் குழு வடபிரதேசக் கிளைகள். யாழ். உதவிக்கூட்டுறவு ஆணையாளருக்கு அனுப்பி வைத்த கடிதத்தில் கோரியுள்ளன.

வடபிரதேசக் கிளைகளின் சார்பில் லங்கா தொழிற் சங்கங்களின் சம்மேளனம் இலங்கைவர்த்தக ஊழியர் சங்கம், அரசாங்க பொதுச்சேவை தொழிற்சங்க சம்மேளனம், நவலங்கா தொழிற்சங்கம் இலங்கை ஆசிரியர் சங்கம், ஐக்கியதொழிலாளர் சம்மேளனம் ஆகியவற்றின் பிரதிநிதிகள் கையெழுத்திட்டுள்ளனர்.

### இன்று வேலைநிறுத்தம்

கூட்டுறவு ஊழியர் தொழிற் சங்கத்தினர் இன்று ஒருநாள் அடையாளவேலை நிறுத்தம் மேற்கொள்வார்கள். என்று, மேற்படி தொழிற்சங்கத்தினர் அறிவித்துள்ளனர்.

### புலோலிப. நோ. கூ. ச.

புலோலி பலநோக்குகூட்டுறவுச்சங்க ஊழியர்களுக்கு ஏற்கனவே ரூ. 102 வழங்கப்பட்டு விட்டதால் இவர்கள் இன்று வேலைக்குச் செல்வார்கள்என்று தெரிவிககப்பட்டது.

அண்மையில் நடைபெற்ற மேற்படிசங்க இயக்குநர்சபைக் கூட்டத்தில்; ஊழியர்களுக்கு ரூ. 102வழங்கவேண்டும் என்று இயக்குநர் சபைத்தலைவர் திரு. வே. கதிர்காமலிங்கம் கேட்டுக் கொண்டதும், இத்தீர்மானம் பின்னர் ஏகமனதாக நிறைவேற்றப்பட்டதும் இங்குகுறிப்பிடத்தக்கது.

## கடலில் மூழ்கி குழந்தை மரணம்

(மன்னார்)

கடலில் மூழ்கிய ஒன்றரை வயதுக் குழந்தை ஒன்று மரணமாகியது.

வங்காலையைச்சேர்ந்த எட்வேட் ஜெயராணிமார்க் என்ற குழந்தையே இவ்வாறு மரணமாகியது.

இம்மரணம் தொடர்பாக நடைபெற்ற மரண விசாரணையின் போது சம்பவதினம் பேசாலையை அடுத்துள்ள சிறு தோப்பு கடற்கரையிலுள்ள வாடி ஒன்றின் முன் விளையாடிக் கொண்டிருந்த குழந்தையைக் காணாது தந்தை தேடிய போது குழந்தை கடலில் மூழ்கிய நிலையில் இருப்பதைக் கண்டு மீட்கப்பட்டதாகவும் வைத்திய சாலைக்கு எடுத்துச் செல்லப் பட்டபோது இடையில் மரணமார்கியதாகவும் தெரிவிக்கப்பட்டது

மரண விசாரணை நடத்திய மரண விசாரணை அதிகாரி எம்.பி.ஏ.ஜப்பார் நீரில் மூழ்கி மூச்சுத் திணறியதால் ஏற்பட்ட விபத்து மரணமென தீர்ப்பளித்தார்.

## யுனிசெவ்...

(1ம் பக்கத் தொடர்ச்சி)

பெறவிருக்கும் கூட்டத்தில், இக்குழுக்கள் அறிக்கைகளைச் சமர்ப்பிப்பார்கள். இதைத் தொடர்ந்து இம்மாத இறுதியில் அபிவிருத்தி வேலைகள் ஆரம்பமாகும். (க)

## இன்று வருடாந்த உற்சவம்

[சுழிபுரம்]

வழக்கம்பரை அம்மன் கோவில் வருடாந்த கொடியேற்ற உற்சவம் இன்றுதிங்கட் கிழமை ஆரம்பமாகவுள்ளது.

இம்மாதம் 11ம் திகதி புதன் கிழமை தேர்த்திருவிழாவும், அடுத்த நாள் வியாழக்கிழமை தீர்த்தத் திருவிழாவும், சனிக் கிழமை பூங்காவனத் திருவிழாவும் நடைபெறவுள்ளது.

உற்சவ காலங்களில் தினமும் மாலையில் அபிராமியந்தாதி பாராயணம் விரிவுரை நடைபெறும்.

## நாளை

[கரவெட்டி]

தொண்டமானாறு அருள்மிகு செல்வச்சந்நிதி ஆனந்தா ஆச்சிரமத்தில் நாளை செவ்வாய்க் கிழமை மாணிக்கவாசகர் குருபூசை சுவாமி சபரத்தினம் அடிகளார் தலைமையில் நடைபெறும். அன்று முழுநாளும் திருவாசகம் ஓதல் இடம் பெறும்:

## ரூபவாஹினியில் இன்று

மாலை

| | |
|---|---|
| 5-30 | நாட்டுவளம் (சிங்களம்) |
| 5-35 | 'ஹூடி ஹூட்பெக்கர்' சிறுவர் நிகழ்ச்சி(ஆங்கிலம்) |
| 6-00 | விளையாட்டுப் பயிற்சி |
| 6-20 | 'இயற்கையும் விஞ்ஞானமும்' சிறுவர் நிகழ்ச்சி |
| 6-35 | சிங்கள நிகழ்ச்சி |
| 6-55 | செய்திகள் (தமிழ்) |
| 7-15 | 'கலை அரங்கம்' |
| 7-45 | சிங்கள நிகழ்ச்சி |
| 8-15 | செய்திகள் (சிங்களம்) |
| 8-35 | எதிர்கால நிகழ்ச்சிகள் |
| 8-55 | 'வேஸ்மினிஸ்டர்' நகைச்சுவை நிகழ்ச்சி (ஆங்கிலம்) |
| 9-30 | செய்திகள் (ஆங்கிலம்) |
| 9-50 | சர்வதேச உதைபந்தாட்டம் |
| 10.30 | உலகச் செய்திகள் |
| 10-30 | நிகழ்ச்சிகள் முடிவு |

## முதல் சுற்று...

(1ம் பக்கத் தொடர்ச்சி)

நேற்றிரவு தெரிவித்தார்.

### இன்றும் நீடிக்கும்

இந்த இரு தலைவர்களின் பேச்சுக்கள் முடிவடையாத நிலையில் உள்ளதாலும் இன்றும் பேச்சுக்கள் தொடர விருப்பதனாலும் பேச்சுக்கள் பற்றிய விபரம் எதனையும் உடனடியாகத் தெரிவிக்க அந்த உயர் அதிகாரி மறுத்து விட்டார்.

தமது குறுகியகால அழைப்பை ஏற்று இந்தியாவுக்கு விஜயம்செய்தமைக்காக இந்தியப் பிரதமர் இலங்கை ஜனாதிபதிக்கு முதலில் நன்றி தெரிவித்துக்கொண்டார்.

### நேற்றிரவும் பேச்சு நடந்தது

இலங்கை ஜனாதிபதி இந்திய பிரதமரைக் கௌரவிக்கும் முகமாக திருமதி இந்திரா காந்திக்கு நேற்றிரவு விருந்துபசாரமொன்றை அளித்தார்.

இந்த விருந்துபசாரத்திலும் இரு தலைவர்களும் தமது பேச்சுக்களை தொடர்ந்து நடத்தினர்.

### பார்த்தசாரதி ஜனாதிபதி சந்திப்பு

இதேவேளை திருமதி இந்திராகாந்தியின் முக்கிய ஆலோசகர் திரு. ஜி. பார்த்தசாரதி நேற்று மாலை இலங்கை ஜனாதிபதியைச் சந்தித்து இலங்கைத் தமிழர் பிரச்னை குறித்து பேச்சுக்களை நடத்தினார்.

இலங்கைத் தமிழர் பிரச்னை குறித்து இரு நாட்டுத் தலைவர்களும் இன்று காலை மீண்டும் சந்தித்து பேசுவார்கள். இன்றைய பேச்சுக்களின்போது ஒரு தீர்க்கமான முடிவு எடுக்கப்படலாமென நம்பப்படுகிறது.

### ஜனாதிபதி இன்றிரவு நாடு திரும்புவார்

பேச்சுக்களை முடித்துக் கொண்டு இன்று மாலை இலங்கை ஜனாதிபதி நாடு திரும்புவார்.

அவர் இலங்கை புறப்படுவதற்கு முன்னர் பத்திரிகையாளர் மாநாட்டை கூட்டி பேச்சுக்களின் பலாபலன்பற்றி கருத்துவெளியிடுவார்.

# இப்படியும் நடக்கிறது

'பயங்கரவாத'த்தின் சின்னம் என்ன?

தலைநகரிலிருந்து வெளிவரும் பத்திரிகைகளின்படி, அந்தச் சின்னம் 'புலி' எனத் தெரியவருகிறது.

நேற்று வெளியான 'வீக்கெண்ட்' ஆங்கில வாரஇதழில் இடம்பெற்ற வாராந்த விமர்சனத்தில் (அர்ச்சனை என்றும் கூறலாம்), இலங்கையின் படம் காணப்படுகிறது. படத்தில் தென்பகுதியில், துப்பாக்கியை ஏந்தியவாறு ஒருவர் மேற்கு நோக்கி நிற்கிறார். தெற்கைப் பார்த்துக் கொண்டு, வடக்கைக் கைகளினால் பற்றிக்கொண்டு புலி காணப்படுகிறது. இலங்கையின் வடபகுதியும் 'புலி'யின் ஓரளவு முழுப்பகுதியும் ஒரு பெரிய சுறாவின் வாய்க்குள் இருப்பதாகச் சித்தரிக்கப்பட்டுள்ளது. சுறாவுக்கு ''சர்வதேசப் பயங்கரவாதம்'' என்று பெயர் சூட்டப்பட்டுள்ளது.

மற்றுமொரு பத்திரிகை நேற்றைய 'ஐலண்ட்'.

ஒரு மேசை. இடதுபக்கத்தில் ஒரு 'சிறிய பிரீவ்கேஸு'டன் ஜனாதிபதி ஜே. ஆரும், வலதுபக்கத்தில் இந்தியப் பிரதமர் திருமதி இந்திராகாந்தியும் நிற்கிறார்கள். 'பிரீவ் கேஸி'ல் அமெரிக்கா பிரிட்டன் என்று எழுதப்பட்டுள்ளது. ஆசனத்தில் அமருங்கள் என்று ஜே. ஆரை இந்திரா அழைக்கிறார்.

இனிமேல்தான் இக் 'கார்ட்டூனி'ன் கிளைமெக்ஸ்!

மேசைக்குக் கீழே புலிகளின் வால்கள், பளிச் பளிச் என்று தெரிகிறது.

இதே 'கார்ட்டூன்', 'ஐலண்டி'ன் சிங்கள ஏடான 'திவியன'விலும் அப்படியே காணப்படுகிறது!

-ஊடுருவி

## ஆயுதங்கள்...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

ளனர்.

பிரிட்டனில் வாழும் இலங்கைத் தமிழர்கள் பயங்கரவாதிகள் ஆயுதங்களைவாங்குவதற்கு உதவி வருகிறார்கள் என்று தெரிவிக்கப்பட்ட குற்றச் சாட்டை இவர்கள் இந்த கடிதத்தில் திட்டவட்டமாகமறுத்துள்ளனர். (இ)

## வானொலி...

(1ம் பக்கத் தொடர்ச்சி)

கூடிய ''அறநெறி ஆரம்''என்பதாகும். இதுவரை காலை 6-10 முதல் 6.25 வரை ஒலிபரப்பான பாமாலைக்குப் பதிலாக இந்நிகழ்ச்சி ஒலிபரப்பப்படும்.

மாலை 6-30 முதல் 7-00மணி வரை இப்பொழுது ஒலிபரப்பாகிவரும் ''பக்தி நெறி'', ''அருளமுதம்'', ''திருவருள் நெறி'', ''ஞானக்கோவை'', ''ஞானாமிர்தம்'' ஆகிய இந்து சமய நிகழ்ச்சிகள் நாளை தொடக்கம் வெள்ளி தவிர்ந்த ஏனைய நாட்களில் மாலை 6-15 முதல் 6-30 வரை இடம் பெறும்,

வெள்ளிக்கிழமை தோறும் ''கோபுரதரிசனம்''- உரைச் சித்திரம் வழமைபோல் அரை மணி நேர நிகழ்ச்சியாக ஒலி பரப்பாகும்.

''புராணபோதம்'' என்ற புதிய நிகழ்ச்சி செவ்வாய்க் கிழமைதோறும் ஒலிபரப்பாகும்.

இப்பொழுது 20நிமிடநேரத்துக்கு ஒலிபரப்பாகும் ''கலைக் கோலம்'', ''குன்றின்குரல்'', ''இளைஞர் மன்றம்'',''உதய மஞ்சரி'' போன்ற நிகழ்ச்சிகள் இனிமேல் அரை மணி நேர நிகழ்ச்சிகளாக இடம் பெறும். நாடகம் இரவு 9-45க்குப் பதிலாக இரவு 9-30க்கு ஒலிபரப்பாகும்.

மணிவிழாக் கொண்டாடும் யாழ். பல்கலைக்கழக உபவேந்தர் பேராசிரியர் சு. வித்தியானந்தன், ''எனது நினைவு அலைகள்'' என்ற தொடரில் நிகழ்த்தும் முதலாவது உரையினை இன்று திங்கட்கிழமை இரவு 9-30க்கு கேட்கலாம்.

இத்தகவல்களை தமிழ்ச் சேவைப்பணிப்பாளர் திரு.வி, ஏ. திருஞானசுந்தரம்தெரிவித்தார்.

## இளைஞர் சடலம்

(யாழ்ப்பாணம்)

நாரந்தனையில் நேற்று முன் தினம் மரணமான இளைஞரின் சடலம், யாழ். ஆஸ்பத்திரிக்கு எடுத்துவரப்பட்டு பிரேத அறையில் வைக்கப்பட்டுள்ளது.

சடலம், இதுவரை எவராலும் அடையாளம் காணப்படவில்லையெனப் பொலிசார் தெரிவித்தனர். (க)

## ''இளைஞர்கள் சக்தி வலிமையுடையது''

[சுழிபுரம்]

''பணம் படைத்தவர்களால் செய்யமுடியாத பல காரியங்களை இளைஞர்கள் இன்று ஒன்று சேர்ந்து செய்து முடித்துள்ளனர் இளைஞர்களுடைய சக்தி மிகவும்வலிமையுடையதாகும். மிகவும் பாழடைந்து பழுதடைந்து இருந்த யாழ்ப்பாணம் கடையிற் சாமியார் ஆலயம் இளைஞர்கள்முயற்சியால்இன்று புதுப்பொலிவோடு திகழ்கின்றது.''

இவ்வாறு நியாய சிரோன்மணி சுப்பிரமணிய சாஸ்திரிகள் வழக்கம்பரை அம்மன் கோவிலில் நடைபெற்ற ஆசாசாரிய அபிசேக வைபவத்திற்கு தலைமைவகித்துப் பேசுகையில் குறிப்பிட்டார்.

## செல்வச்சந்நியில் மணிவாசகர் சுவாமிகள் குருபூஜை

[புலோலி]

மாணிக்கவாசக சுவாமிகள் குருபூசை நாளை செவ்வாய்க் கிழமை நடைபெறும். இக்குருபூசை தினத்தில் செல்வச்சந்நிதி ஆனந்த ஆச்சிரமத்தில் இருக்கும் ரமண மன்றத்தில் திருவாசகம் முற்றும் ஓதுதல் வைபவம் நடைபெறும். இவ்வைபவத்தைத் திருக்கேதீச்சர மடத்தில் பல்லாண்டு காலம் இருந்து திருவாசகத் தொண்டுகள் செய்து திருவாசகச்சுவாமிகள் என்று தொண்டர்களால் அன்பாக அழைக்கப்படும் க. சபாரத்தினம் சுவாமி தலைமையில் நடைபெறும் இதில் பல பண்ணிசைப் புலவர்கள் பங்கு கொண்டு சிறப்பிக்க இருக்கிறார்கள். இத்தொண்டில் பக்தர்கள் அனைவரையும் சமுகம் கொடுத்து திருவாசகத்தைஓதியும் கேட்டும் திருவருளைப் பெற்று ஏகுமாறு கேட்டுக் கொள்ளப்படுகின்றனர்

## மரண அறிவித்தல்

### S. S. நரசிங்கம்

இளைப்பாறிய புகையிரத நிலைய அதிபரும், அனுமதி பெற்ற பெறுமதிக் கணிப்பாளரும், நீதிமன்ற ஏல விற்பனை ஆணையாளருமான தொல்புரம் கிழக்கைச் சேர்ந்த திரு. சோமசுந்தரம் நரசிங்கம் J. P. காலமானார். இவர் நடேஸ்வரியின் அன்புக் கணவரும், நிமலன் (Accountant, Colombo Land and Development Co Ltd), கோகுலன் (Sub Lieutenant, இலங்கைக் கடற்படைப் பிரிவு), நளாயினி ஆகியோரின் அருமைத் தந்தையாரும், சுகந்தியின் மாமனாருமாவார். அன்னாரின் பூதவுடல் இன்று காலை 9-30 மணிக்கு அவரது இல்லத்திலிருந்து தகனக்கிரியைகளுக்காக எடுத்துச்செல்லப்படும். 644

## புதிய கட்டிட திறப்புவிழா

(யாழ்ப்பாணம்)

[illegible]

கனகமுக [illegible] திலயத்தின் 30வது ஆண்டு நிறைவு விழாவும் புதிய கட்டிட திறப்புவிழாவும் இன்று திங்கட்கிழமை மாலை திரு இ. குலசேகரம்பிள்ளை தலைமையில் நடைபெறவுள்ளது. (வெ)

இப் பத்திரிகை 'ஈழநாடு' லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம், சிவன்கோவில் மேற்கு வீதி, 63ம் இலக்க அச்சகத்தில் 1984ம் ஆண்டு ஜூலை மாதம் 2ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது. Registered as a News Paper at the General Post office Sri Lanka under number B 100236/81 Eelanadu P. o. Box 49, Telegram Eelanadu. Telephone; 22389 — 24126.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org